
# பன்றித் தலைச்சியில் கண்ணகி வழிபாட்டுக் கோலங்கள்



மட்டுவில். ஆ. நடராசா

# பன்றித் தலைச்சியில்
# கண்ணகி வழிபாட்டுக் கோலங்கள்

நூலாசிரியர்

**மட்டுவில். ஆ. நடராசா**

மட்டுவில் கா. சிவபாலன் அவர்களால்
வெளியிடப் பெற்றது

நூலின் பெயர் : பன்றித்தலைச்சியில்
கண்ணகி வழிபாட்டுக் கோலங்கள்
நூலாசிரியர் : மட்டுவில் ஆ. நடராசா
முதற்பதிப்பு : 2008. 03 . 16.
பதிப்புரிமை : நூலாசிரியருக்கு
அச்சுப் பதிப்பு : ரெக்னோ பிரின்ட்,
55, ஈ.ஏ.குரே மாவத்தை, கொழும்பு - 6.



**இன்று (2008.03.16)**
**இல்லற வாழ்விற் பொன்விழாக் காணும்**
**ஆறுமுகம் நடராசா பாக்கியம் நடராசா தம்பதி**

# அணிந்துரை

யாழ்ப்பாண மாவட்டத்தின் தொன்மை வாய்ந்த கிராமங்களிலே மட்டுவிலும் ஒன்றாகும். கல்விப் பாரம்பரியமும் புலமை வளமும் மிக்க இக்கிராமத்தவரான திரு.ஆ.நடராசா அவர்கள் எழுதிய பன்றித்தலைச்சியில் கண்ணகி வழிபாட்டுக் கோலங்கள் என்னும் நூலுக்கு அணிந்துரை எழுதும் வாய்ப்புக் கிடைத்தமை மகிழ்வைத் தருகின்றது.

மட்டுவில் என்றதும் உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளையையும் அவரது புதல்வர்களையும் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையையும் நினைக்காத தமிழ் அறிந்தோர் எவரும் இருக்கமாட்டார்கள். அத்துடன் பன்றித்தலைச்சி அம்மனையும் சந்திரமௌலீசர் ஆலயத்தையும் மனத்திருத்திக் கொள்ளுவார்கள்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திற்கு யாழ்ப்பாணக் குடாநாட்டின் பலபாகங்களில் இருந்தும் அடியவர்கள் விசேட தினங்களிலே வழிபாட்டிற்கு வருவது வழக்கம். தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்து பக்தி சிரத்தையுடனும் மன நிறைவுடனும் வீடு திரும்புவார்கள். மிகவும் தொன்மைவாய்ந்த இவ்வாலயத்தின் தோற்றம், வளர்ச்சி, வழிபாட்டு நடைமுறைகள் முதலானவற்றை அறிய அடியார் கூட்டம் விரும்புவதில் ஆச்சரியமில்லை. பன்றித் தலைச்சி அம்மனின் அருளாட்சிக்குள் ஆட்பட்டு நிற்கும் அடியவர்கள் அறியவேண்டிய பலவிடயங்களைத் தொகுத்தும் பகுத்தும் விரித்தும் திரு. ஆ. நடராசா அவர்கள் எழுதியுள்ளார்கள்.

ஆலயத்தின் அமைவிடம், அமைப்பு முதலானவற்றைப் புறநோக்கு என்னும் பகுதியிலே விரிவாகக் குறிப்பிடும்

நூலாசிரியர் தீர்த்தக் கேணியின் சிறப்பினைப் பண்டிதமணியின் கவிதையை மேற்கோள் காட்டிக் குறிப்பிடுவது போற்றுதற்குரியது. செவிவழிக் கதைகளின் துணைகொண்டு விளக்கிச் செல்லும் நூலாசிரியர் ஈழ நாட்டிலே கண்ணகி வழிபாட்டின் தொடர்ச்சியையும் தொன்மையையும் ஏதுக்கள் பலவற்றை எடுத்துக் காட்டி விளக்கிச் செல்லுகின்றார்.

பெண்தெய்வ வழிபாட்டு மரபினைச் சுருக்கமாகக் குறிப்பிட்டுச் செல்லும் இந்நூலாசிரியர் ஈழநாட்டுக்குக் கண்ணகி வழிபாடு வந்து சேர்ந்த வரலாற்றைச் சிலப்பதிகாரத்தின் துணையோடு சுட்டிக் காட்டுகின்றார். ஈழநாட்டிலே கண்ணகி வழிபாடு நடைபெறும் இடங்களை இலக்கியச் சான்றுடன் பட்டியல் இட்டுக் காட்டியுள்ளார். இப்பட்டியலை நோக்கும் பொழுது கண்ணகி ஆலயங்கள் பல இன்று கண்ணகி வழிபாட்டில் இருந்து விடுபட்டு ஆகம நெறிப்பட்ட அம்பாள் ஆலயங்களாக மாறியுள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது.

சமூக மேனிலையாக்கத்தின் வெளிப்பாடாகவும் சைவ-சித்தாந்த மரபின் செல்வாக்கினாலும் இம்மாற்றம் நிகழ்ந்திருக்-கின்றது என்பதை நூலாசிரியர் சொல்லாமல் சொல்லி வைக்கின்றார். பொங்கல், படையல், பூசை முதலானவற்றை அடியவர்கள் தாமாகவே ஆற்றி வழிபாடியற்றும் கிராமிய வழிபாட்டு மரபிலே இறைவனுக்கும் அடியவனுக்கும் இடையிலே ஒருவகை உளவுணர்வுபூர்வமான பக்தி நிலவியமையைப் பன்றித்தலைச்சி அம்மனின் ஆலய வாழ்வியல் நூலினூடு தரிசிக்க முடிகின்றது.

கண்ணகியோடு தொடர்புடைய பல்வேறு விதமான கதைகளைத் தொகுத்துக் கூறும் இந்நூல் சிலப்பதிகாரம் காட்டும் கண்ணகிக்கும் கண்ணகி கோயில் வழிபாட்டு நம்பிக்கை-யுடையோர் கருதும் கண்ணகிக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுவதையும் சுட்டிச் செல்கின்றது. கண்ணகியைக் கண்ணகை என வழங்குவதும் பக்திமேலீட்டால் கண்ணகியைக் கிழவி என அடியவர்கள் அழைப்பதும் கிராமிய வழிபாட்டின் பலமான பகுதியெனக் கருதவைக்கிறார்.

பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திலே நீண்ட காலமாக வழங்கி வந்த கோவலன் கதைப்படிப்புப் பற்றிய செய்தி ஆய்வாளர்களுக்கு முக்கியமானதொரு தகவலாகும். இன்று கோவலன் கதைப்படிப்பு முற்றாக இல்லாமற் போய்விட்டது. அத்துடன் அந்த ஏட்டுப் பிரதியும் கிடைக்காமற் போயிற்று என்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

ஈழத்து இலக்கிய வரலாற்றிலே கோவலன் கண்ணகியோடு தொடர்புடைய பல இலக்கியங்கள் இருந்துள்ளன. இன்று எமக்குக் கிடைக்கும் கண்ணகி வழக்குரை (மட்டக்களப்பு) சிலம்பு கூறல் (முல்லைத்தீவு) கோவலனார் கதை (வடமராட்சி மந்திகை) ஆகிய மூன்றையும் ஒப்பு நோக்கி ஆராயும் பொழுது ஈழத்தின் இலக்கிய பண்பாட்டு சமூக அமிசங்கள் பலவற்றைக் காணமுடிகின்றது. மறைந்து போன கண்ணகி கதை பற்றிய இலக்கியங்கள் கிடைத்திருந்தால் இலக்கிய சமூக பண்பாட்டு அமிசங்கள் பலவற்றைக் கண்டறிந்திருக்கலாம்.

கண்ணகி வழிபாடு நிகழும் கிராமிய -பிரதேச மக்களின் சமூக - பண்பாட்டு வாழ்வியல் அமிசங்களுக்கு ஏற்ப இக் கதையிலே மாற்றங்களும் இடைச்செருகல்களும் ஏற்பட்-டுள்ளமையை கிடைக்கும் இலக்கியங்களைப் படிப்போர் உணர்வர். இக் கோவலன் கதைப் படிப்பு நிகழ்வு பற்றிய செய்தி ஆய்வாளர்களுக்குப் புதிய தகவலாக அமைகின்றது.

கண்ணகி வழிபாட்டிலே நாவலரின் செல்வாக்குப் பற்றிப் பொருத்தமான மேற்கோள்களுடன் நூலாசிரியர் சுட்டிச் செல்லுகின்றார். சைவமும் தமிழும் என்ற கருத்து நிலை மேலோங்கியமை கிராமிய வழிபாட்டு மரபுகளுக்கு மெலிவைக் கொடுத்தது என்பதையும் இந்நூலைப் படிப்போர் உணர்வர். தொன்மை மறவேல் என்ற முதுமொழிக்கு மதிப்பளித்து இந்நூலாசிரியர் நடுநிலைமையோடு பன்றித்தலைச்சியின் வரலாற்றைத் தெளிவாக எழுதியுள்ளார்.

"காலம் என்பது கறங்குபோற் சுழன்று செல்லும்" என்பதை உணர்ந்து கொண்ட இந்நூலாசிரியர் மாறிவரும் நிகழ்வுகள் என்ற மகுடத்திலே இவ்வாலயத்தின் இன்றைய நிலையைச் சுட்டிக் காட்டுகின்றார்.

படிப்பறிவும் பட்டறிவும் சங்கமிக்கும் பாங்கினை இந்நூலினூடு காணமுடிகின்றது. ஈழத்தின் சிறப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தின் சமய சமூக பண்பாட்டு - இலக்கிய விடயங்களைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்வோர் நிச்சயம் படிக்க வேண்டிய நூலாகப் பன்றித் தலைச்சியில் கண்ணகி வழிபாட்டுக் கோலங்கள் என்னும் இந்நூல் அமைகின்றது. ஆசிரியரின் தேடலும் தொகுப்பும் தெளிவாகவே பதிவாகிய இந்நூல் போன்ற பல நூல்கள் எமது பிரதேச ஆலயச் சூழல்களை மையமாக வைத்து வெளிவர வேண்டுமென்று அவாவுறுகிறோம். திரு. ஆ.நடராசா அவர்களின் பணிதொடர எமது வாழ்த்துக்கள்.

**பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா**
*தலைவர்*
*தமிழ்த்துறை.*
*யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.*
*18.02.2008*

# வெளியீட்டுரை

ஈழநாட்டிலே பிரசித்தி பெற்ற வழிபாட்டுத் தலங்களுள்ளே மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயம் ஒன்றாகும். இதன்வரலாறு மிகவும் அற்புதமானது. அம்பாள், வழிபாடு செய்த அடியார்களுக்குக் காட்டிய அற்புதங்களோ அநேகம். எங்கள் நாட்டுத் தவஞானி தவப்பெருந்திரு யோகசுவாமிகளுக்கு அவரது குருவான செல்லப்பா சுவாமிகளால் 1910 ஆம் ஆண்டு திருவடி தீட்சை வழங்கப் பெற்ற திருத்தலம் பன்றித் தலைச்சி அம்பாள் ஆலயம். இங்கு பங்குனி மாதம் நாடளாவிய ரீதியில் பெருவிழாக் காலமாக அமைந்தது. நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் அடியார் கூட்டம் வருகை தந்து பன்றித்தலைச்சிக் கண்ணகி அம்மனை வழிபாடு செய்து, பொங்கல் படையல் செய்து வருகின்ற வழக்கம் உண்டு. இன்றும் இதனைப் பங்குனித் திங்கள் காலங்களில் பரக்கக் காணலாம்.

எங்கள் நாட்டுச் சைவத் தமிழ்ப் பேரறிஞர் கலாநிதி. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் பன்றித்தலைச்சிக் கண்ணகி அம்மை தோத்திரம் பாடியிருக்கிறார். சாவகச்சேரி வித்துவான் ச. பொன்னம்பலபிள்ளை ஊஞ்சற் பதிகம் பாடியிருக்கிறார். மேலும் இதே போன்று பல அறிஞர்கள் பதிகங்களும் பாமாலைகளும் பாடியிருக்கின்றனர்.

எனது பெரிய தந்தையார் முறையான லோச் செல்லப்பா அவர்களைப் பண்டிதமணி அப்பா அவர்கள் அற்புத விவேகி லோச் செல்லப்பா என அழைப்பர். லோச் செல்லப்பாவின் சகோதரரின் மகனான ஆறுமுகம் நடராசா அவர்களே இந்நூலின் ஆசிரியர். இவர் தமது ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றும் ஓயாது எழுத்துப்பணியில் ஈடுபட்டுத் தமக்கென முத்திரை பதித்தவர். பல சமயக்கட்டுரைகளையும் வேறு கட்டுரைகளையும்

பத்திரிகைகள் வாயிலாக எழுதியிருக்கிறார். மேலும் பல சைவ சமய நூல்களையும் மெய்கண்ட சாத்திர நூல்களுக்கு விளக்கங்களையும் எழுதி வெளியிட்டு இருக்கிறார்.

சைவப் பெரியார் முதலியார் குலசபாநாதன் அவர்கள் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பற்றி ஒரு நூலை எழுதினார். அந்நூல் ஆறாண்டு காலத்துக்கு மேலாகத் தடைப்பட்டிருந்து நல்லூர் தேவஸ்தான வெளியீடாக 1971 இல் வெளிவந்தது.

இந்நூலும் எழுதப்பட்டுச் சில ஆண்டுகளுக்குப் பின்பே வெளிவருகிறது. பன்றித்தலைச்சி அம்பாளின் பெயரில் மகுடம் தாங்கிவரும் இந்நூல் அனைவரதும் வரவேற்பைப் பெறுமென்பது நம்பிக்கை. ஏனெனில் இந்நூல் ஈழத்துக் கண்ணகி வழிபாட்டுத் தலங்கள், மட்டக்களப்பில் கண்ணகி வழிபாட்டு முறைகள், சிலப்பதிகாரந் தருஞ் செய்திகள் போன்ற பல அம்சங்களைத் தாங்கி வருகின்றது. இந்நூல் ஆய்வாளர்களுக்கும் இலக்கிய கர்த்தாக்களுக்கும் ஒரு பெரு விருந்தாகும். எமது தென்மராட்சிப் பகுதியில் இது போன்ற ஆராய்ச்சி நூல் எழுதவல்ல ஒரே ஒருவர் திரு. ஆ. நடராசா என்றால் அதில் மிகையொன்றுமில்லை.

அளவு கடந்த அடியார்களையெல்லாம் கொள்ளை கொள்ளுகின்ற பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயம் ஒரு புனித பிரதேசமாக அமையவும் பல்வேறு திருப்பணிகள் எல்லாம் சிறந்து விளங்கவும் இந்நூல் உந்துசத்தியாயிருக்கும்.

இன்று (2008.03.16) நூலாசிரியர் திரு. நடராசா அவர்களும் திருவாட்டி பாக்கியம் நடராசா அம்மையார் அவர்களும் திருமணவாழ்வில் பொன்விழாக் காண்கிறார்கள். இவர்கள் திருமண வாழ்வில் நிறைவு கண்ட தர்மார்த்த தம்பதிகள். எல்லாவித செல்வங்களையும் இனிய பிள்ளைச் செல்வங்களையும் பெற்றிருப்பவர்கள். வாழ்வாங்கு வாழ்ந்து இல்லற தர்மம் பேணிய இவர்களுடைய திருமணவாழ்வின் பொன்விழா மலராக வெளிவருகிறது இந்நூல் .

இதனை வெளியீடு செய்யும் பணி திருவருள் வசத்தால் எனக்குக் கிடைத்தது. இதனை நான் வெளியிடுவதற்கிணங்கிய நூலாசிரியருக்கு எனது நன்றி.



தனது வேலைப் பளுவினூடே இந்நூல் முழுவதையும் கருத்தூன்றிப் படித்து இதற்கு அணிந்துரை வழங்கியவர் வடமராட்சிக் கல்விப் பாரம்பரியத்தில் ஒரு தலைமகனெனக் கொள்ளத்தக்கவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவருமான பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா அவர்கள். அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

இந்நூலை விரைவாகவும் அழகாகவும் அச்சிட்டுதவிய திரு.தி.கேசவன் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

எமக்குத் தோன்றாத் துணையாய் நிற்கும் எல்லாம் வல்ல சாந்த நாயகி சமேத சந்திரமௌலீசப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

**கா. சிவபாலன்.**
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி
*2008.03.16.*

# முகவுரை

ஈழத் தமிழகத்தில் கண்ணகி கோயில்கள் பல இருக்கின்ற போதிலும் அவற்றிற் சில கோயில்கள் மாத்திரமே பிரசித்தமானவை. அவற்றில் ஒன்று மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மை கோயில். இவ்வாலயத்தின் வழிபாட்டுக் கோலங்கள் பற்றிக் கூறும்போது, கண்ணகி வழிபாடு பற்றிய பொதுவான நடைமுறைகளைப் புறந்தள்ள முடியாது.

சிலப்பதிகாரத்து வரந்தரு காதையிலும் உரைபெறு கட்டுரையிலும் கூறப்படும் செய்திகளின்படி இந்தியாவிலிருந்தே இலங்கைக்குக் கண்ணகி வழிபாடு கொண்டுவரப்பட்டதென நம்பலாம்.

இலங்கையில் மாத்திரம் வழக்கிலுள்ள கண்ணகை கதைகள் மதுரையை எரித்த கண்ணகி, கோபந் தணியாதவளாய் இலங்கைக்கு வந்து, அவள் தங்கிய இடங்கள் தோறும் அடியார்கள் செய்த வழிபாட்டினாற் குளிர்ந்து கோயில் கொண்டெழுந்தருளியிருந்து அருள் புரிகின்றாள் என்கின்றன. இக்கதைகளின்படி, கண்ணகி மதுரையிலிருந்து இலங்கைக்கு வந்தாளே தவிர கண்ணகி வழிபாடு இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்படவில்லை.

சிலப்பதிகாரம் கண்ணகியைப் பத்தினித் தெய்வமென்று கூற, கண்ணகை கதைகள் கண்ணகியைச் சத்தியின் அவதாரமெனக் காட்ட முனைகின்றன.

கண்ணகையைக் கடவுளெனக் காட்ட முயல்வோரின் முனைப்புக் காரணமாகக் கண்ணகி கோயில்களிற் சிவமூர்த்தங்கள் பரிவாரத் தெய்வங்களாகப் பிரதிட்டை செய்யப்பட்டன.



சைவ சித்தாந்தச் செந்நெறியின் காவலராக விளங்கிய நாவலர் அவர்கள், சிவநிந்தனையாகிய இச்செயலைக் கண்டித்தார். அதனாற் கண்ணகி வழிபாட்டுக் கோலங்களிற் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. பன்றித்தலைச்சியின் வழிபாட்டுக் கோலங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

இந்நூலில் பன்றித்தலைச்சியின் வழிபாட்டுக் கோலங்கள் பற்றியும் கண்ணகி வழிபாட்டுக் கோலங்கள் பற்றியும் கூறப்படுகின்றது. அதனால் இவ்விரண்டுக்கும் பொதுவாக இந்நூலுக்கு பன்றித்தலைச்சியில் கண்ணகி வழிபாட்டுக் கோலங்கள் எனத் தலைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய எட்டாண்டுகளுக்குமுன் பத்திரிகைகளில் வெளிவரச் செய்யும் நோக்கோடு இந்நூலில் இடம் பெறுங் கட்டுரைகளை எழுதினேன். அவை நீளமாக அமைந்துவிட்டன. அதனால் இவற்றை நான் பத்திரிகைகளுக்குக் கொடுக்கவில்லை.

இக்கட்டுரைகள் இவ்வளவு காலமும் உறக்கத்தில் இருந்தன. இவற்றுக்குச் சிறிது சிறிதாக விழிப்புணர்வை உண்டு பண்ணி நூலுருவில் வெளிவரச் செய்திருக்கிறார் தம்பி சிவபாலன்.

இவர் "மட்டுவில் தந்த பண்டிதமணி சி.க" என்னும் நூலை வெளியிட்டவர். தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்திற் பணிபுரிபவர். கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை "அம்மா" என்று கூறும்போதெல்லாம் புளகாங்கிதங் கொள்பவர். துர்க்காதேவி தேவஸ்தானம் மாதந்தோறும் வெளியிடும் "அருள் ஒளி" சஞ்சிகையின் உதவியாசிரியராகப் பணிபுரியும் கா.சிவபாலன் இப்பொழுது இந்நூலை வெளியிடுகிறார். அவருக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இந்நூலை எழுதுவதற்கும் வெளியிடுவதற்கும் தோன்றாத் துணையாய் இருந்த சாந்தநாயகி சமேத சந்திரமௌலீசப் பெருமானைப் போற்றித் துதிப்போமாக.

**ஆ. நடராசா**

25, 1/2, E.S. Fernando Mawatha.,
Colombo. 06,
Sri Lanka.

## பன்றித்தலைச்சியில் கண்ணகி வழிபாட்டுக் கோலங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆலயத்தின் புறநோக்கு | 15 |
| 2. | பன்றித் தலைச்சி | 22 |
| 3. | பத்தினித் தெய்வம் | 28 |
| 4. | கண்ணகை கதைகள் | 37 |
| 5. | கண்ணகை வழிபாட்டில் நாவலர் ஏற்படுத்திய தாக்கங்கள் | 51 |
| 6. | மாறிவரும் நிகழ்வுகள் | 56 |

# ஆலயத்தின் புறநோக்கு

தென்மராட்சியிலே மட்டுவில் வடக்குப் பல விசேடங்களோடு கூடியது. அவ்விசேடங்களுள் சனநாயகமான விசேடங்கள் இரண்டு. அவ்விரண்டனுள் ஒன்று பன்றித்தலைச்சி என வழங்கும் கண்ணகி அம்மை கோயில். தாம் பாடிய மட்டுவில் கண்ணகி அம்மை தோத்திரத்துக்கு எழுதிய முகவுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்.

ஈழநாட்டிலுள்ள புதுமை மிக்க பழம் பெரும்பதிகளான கதிர்காமம், நல்லூர், நயினாதீவு, வல்லிபுரக்கோயில் முதலியவற்றின் வரிசையில் இவ்வாலயம் இடம் பெறுகிறதெனவும் சைவரும் கிறிஸ்தவரும் பௌத்தரும் இஸ்லாமியரும் இவ்வாலயத்துக்கு வந்து வழிபடுவதைக் காணலாமெனவும் சீவன் முத்தர்களாக இவ்வுலகில் வாழ்ந்த சிவயோக சுவாமிகளும் அவரது குருநாதராகிய செல்லப்பா சுவாமிகளும் ஆண்டுதோறும் பங்குனி மாசத்து முதலாவது திங்கட்கிழமை இவ்வாலயத்துக்கு வந்து பொங்கல் செய்து வழிபாடாற்றத் தவறுவதில்லை எனவும் யாழ்ப்பாணம் சிவ தொண்டன் சபையாரின் வெளியீடொன்று கூறுகின்றது.

1958ஆம் ஆண்டு இனக்கலவரம் இடம்பெற்றபோது இவ்வாலயத்தில் சிறந்ததொரு அபிடேகத்தைச் செய்யும்படி சிவயோக சுவாமிகள் கட்டளையிட்டாரெனவும்அவரது ஆணைப்படி அபிடேகஞ் செய்தவுடன் கலகம் ஒழிந்ததெனவும் அவ் வெளியீடு குறிப்பிடுகிறது.

தன் அடியவன் ஒருவனுக்காக மாட்டுத் தலையைப் பன்றித் தலையாக மாற்றிய காரணத்தால் இங்கெழுந்தருளியிருக்கும்

கண்ணகி அம்மை பன்றித் தலைச்சி என அழைக்கப்படுகிறாள் என்பது ஐதிகம்.

இங்கு கோயில் கொண்டிருக்கும் தெய்வத்தை வராகி (பன்றித் தலையை உடையவள்) எனினும் பொருந்தும் எனவும் சிவதொண்டன் வெளியீடு செப்புகின்றது.

சித்திரைப் புத்தாண்டு, வைகாசி விசாகம், ஆவணிச்சதுர்த்தி, நவராத்திரி, கார்த்திகைத் திங்கள், விளக்கீடு, திருவெம்பாவை, தைப்பொங்கல், பங்குனித்திங்கள் முதலியவை இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

திருவெம்பாவைக் காலத்தில் மகோற்சவம் (கொடியேற்றத் திருவிழா) நடைபெறுகிறது. நவராத்திரி காலத்தில் விஜய தசமியன்று மானம்பு விழாவும் அதற்கு முதல் நாள் மகிடாசுர சங்காரமும் நடைபெறுகின்றன.

பங்குனித் திங்கட்கிழமைகளில் நடைபெறும் பொங்கல் விழாவின் போதே பல்லாயிரக் கணக்கான பத்தர்கள் அம்மையின் ஆலயத்தை நாடி வந்து பொங்கலும் பூசையும் அர்ச்சனையுஞ் செய்து நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி அம்மையின் அருளைப் பெற விழைகிறார்கள்.

இவ்வாலயத்துக்குச் சொந்தமான காணிகள் பல மட்டுவிற் கிராமத்தில் உண்டு. அடியார்கள் காணிக்கை கொடுக்கிறார்கள். இவ்விருவகையாலும் ஆலயத்துக்கு வருவாய் வருகிறது.

ஆலயத்தின் பழமையையும் அம்மையின் புதுமையையும் அறிந்து முதல் முறையாக இங்கு வருவோர் இவ்வாலயத்தின் கோலக் கோபுரத்தை வெகு தொலைவிலிருந்தே காணலாமெனக் கற்பனை செய்து கொண்டு வந்தால் தமது கற்பனை வெறுங் கற்பனையே என்பதை உணர்வர். அவர்களாற் கோபுரத்தைக் காண முடியாது.

பிரதான வீதியிலிருந்து ஆலயத்தை நோக்கித் திரும்பியவுடன் வெள்ளைக் கற்களினாற் கட்டப்பட்ட தேரின் தரிப்பிடந் தோன்றும். அண்மைக் காலம் வரை கருவறையின் மீது தூபி வைக்கப்பட்டிருக்கவில்லை. தூபி இருக்க வேண்டிய இடத்தில் தகரத்தாற் செய்யப்பட்ட குடிலொன்று இருந்தது. அம்மை குடிலின்



கீழ்க் கொலுவிருக்கும் கோலத்திற் காணப்பட்டாள். 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற குடமுழுக்கின் போது தான் கருவறையின் மீது தூபி தாபிக்கப்பட்டது.

பன்றித்தலைச்சி என்னும் பெயருக்கேற்ப மூல மூர்த்தி பன்றித் தலையுடன் காட்சியளிக்கும் எனக் கருதி வருபவர்களுக்கு ஏமாற்றமே ஏற்படுகிறது. இரண்டு கரங்களுடன் நிற்கும் நிலையில், தெய்வக் கண்ணகியின் தாமிர விக்கிரகம் தெய்வீகப் பொலிவோடு, அலங்கரிக்கப்பட்டு அழகாகக் காட்சி தருகின்றது.

அம்மையை நாடிவந்து இத்தனை ஏமாற்றங்களையும் அடையும் அடியார்கள் அவளின் தெய்வத் திருக்கோலத்தைக் கண்டவுடன் ஒருகணமாவது தம்மை மறக்கிறார்கள். ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள, அளப்பருங் காரணங்கள் நான்கும் சிந்தையேயாகத் தெய்வீக அனுபவத்தில் திளைக்கிறார்கள். சிறிது சிறிதாகச் சுய நினைவு வருகிறது. அதன் பின்பே அவளெதிரில் உள்ள நந்தி பலிபீடம் கொடிமரம் முதலியன அவர்களுக்குப் புலப்படுகின்றன.

அவர்கள் உள்வீதி வழியாக வலம் வருகிறார்கள். ஆலய வாசலுக்குத் தெற்குப் புறமாக அலுவலகமும் மடைப்பள்ளியும் அமைந்திருக்கின்றன. அலுவலகத்தின் முன்பக்கத்தில் அறிவித்தற் பலகை தொங்குகின்றது. அதில் பூசை நடைபெறும் காலங்களும் வழிபடுவோர் தாம் செய்விக்கும் கருமங்கள் ஒவ்வொன்றுக்கும் செலுத்த வேண்டிய கட்டணங்களும் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன.

அடுத்தபடியாக, தெற்கு நோக்கிய வாசலில் சிவகாமியம்பாள், விநாயகர், பாலசுப்பிரமணியர் விக்கிரகங்கள் அழகாகக் காட்சியளிக்கின்றன. அவற்றுக்கண்மையில் சண்டேசுவரியையுங் காண முடிகின்றது. மேற்குத் திசையில் விநாயகர் நாகதம்பிரான் ஆலயங்களும் வடமேற்குத் திசையில் வேற்பெருமானுக்குரிய கோயிலும் அதற்கப்பால் தெற்கு நோக்கி சனீஸ்வரன் கோயிலும் அமைந்திருக்கின்றன. வடகிழக்குத் திசையில் வசந்தமண்டபம் அமைந்திருக்கின்றது. எழுந்தருளியாக இராசஇராசேஸ்வரி அம்மன் காட்சி தருகிறார். விழாக்காலங்களில் இராசஇராசேஸ்வரியோடு விநாயகரும் சுப்பிரமணியரும்

எழுந்தருளுவதுண்டு. அதற்கப்பால் மேற்கு நோக்கி யாகசாலையும் வயிரவர் கோயிலும் இருக்கின்றன. வயிரவர் ஆலயத்தில் வயிரவப் பெருமானுக்குப் பதிலாக முத்தலைச் சூலமே வைக்கப்பட்டிருக்கிறது. வயிரவர் கோயிலுக்கப்பால் மணிக்கோபுரம் அமைந்திருக்கிறது.

உள்வீதிவழியே வலம்வந்த அடியார்கள் வெளி வீதி வழியாக வலம் வருகிறார்கள். ஆலயத்தின் தெற்குப் பக்கத்தில், நாற்புறமும் வெள்ளைக் கற்களாலான படிக்கட்டுக்களையுடைய விசாலமான தீர்த்தக் கேணி காட்சியளிக்கிறது. இத்தீர்த்தத்தையே அடியார்கள் பொங்கல் செய்வதற்கும் நீராடுவதற்கும் உபயோகிக்கிறார்கள். அதைக் கண்டவுடன்

"கங்கா தீர்த்தம் உன்தீர்த்தம்
கடுநோய்க் கவுடத முன்தீர்த்தம்
அற்புதம் அற்புதம் அவைகோடி
அளவிடற் குளையுமென் மனங்கோடி"

எனப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கண்ணகி அம்மை தோத்திரத்திற் பாடியதன் ஒரு பகுதி ஞாபகத்துக்கு வருகின்றது.

தீர்த்தக் கேணிக்கு வடகிழக்கில் பொங்கல் செய்வதற்குப் பயன்படுத்தும் சிறியதொரு மண்டபம் அமைந்திருக்கிறது. இவற்றைக் கடந்து சென்றால் தெற்கு வீதியின் தென்புறத்தில் பங்குனித்திங்கட் கிழமைகளில் அடியார்களுக்குக் குடிப்பதற்கு நீர் வழங்குவதற்காகக் கட்டப்பட்ட நீர்த் தொட்டியொன்றும் சிறிய மடங்களும் காணப்படுகின்றன.

தெற்கு வீதியில் இருப்பது போல மேற்கு வீதியில் ஒன்றும் வடக்கு வீதியில் இரண்டுமாக மூன்று நீர்த்தொட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆலயத்தின் வடமேற்கில் இரண்டு மடங்கள் ஈயார் கைப்பொருள் போல எவருக்கும் பயனின்றிக் கிடக்கின்றன. ஆலயத்தின் வடகிழக்கிலுள்ள ஒருமடம் முதுமையால் முடங்கிக் கிடக்கின்றது.

அன்னை பராசக்தி தன்னை அடைந்து வழிபடும் அடியார்களின் பிறவிப் பிணியாகிய வெம்மையை நீக்கி,



அவர்களுக்குப் பேரின்பப் பெருவாழ்வாகிய குளிர் நிழலைக் கொடுப்பது போல ஆலயச் சூழலில் நிற்கும் மருது முதலிய மரங்கள் பங்குனி வெய்யிலின் வெம்மையைத் தணித்துத் தமது நிழலில் தங்கும் ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு குளிர் நிழலைத் தருகின்றன. பங்குனி விழாவைக் காணவரும் பத்தர்கள் இம்மரங்களின் கீழ்த் தங்கியே பொங்குகிறார்கள். பொங்கும் போதெழும் கொழுந்தூமம் பொன்னுலகுக்கோர் பெருந்தூபமாகவும் பல கிலோமீற்றர் தூரத்துக் கப்பாலிருந்தே பார்க்கக் கூடியதாகவும் விளங்குகின்றது.

அடியவர்கள் தாமே ஆக்கிய பொங்கல், மோதகம், சோறு வெங்காயம் பச்சைமிளகாய் தேங்காய்ப்பால் அல்லது மோர் முதலியவற்றைக் கலந்த நீர்ச்சோறு, பழம், பாக்கு, வெற்றிலை முதலியவற்றை ஆலயத்தின் வெளிமண்டபத்தில் அம்மைக்கு நிவேதிக்கிறார்கள்.

படைக்கப்பட்ட பண்டங்கள் பலருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அதனால் பன்றித் தலைச்சிக்கு வந்து பசியோடு வீட்டுக்குச் செல்வோர் எவரையுங் காணமுடியாது.

ஆலயத்தின் வடக்கு வீதி - புத்தூர் மீசாலை வீதி. இவ்வீதி வழியாக நாடோறும் பெருந்தொகையான வாகனங்கள் செல்கின்றன. அந்த வாகனங்களிற் செல்வோர் பலருக்குப் பன்றித்தலைச்சியைப் பற்றியதொரு பயம் உண்டு. பன்றித்தலைச்சியை வணங்காது சென்றால், தமது வாகனங்களில் ஏதாவது பழுதோ, பிரயாணத்தில் ஏதாவது தடையோ ஏற்படுமென்பது அவர்களது நம்பிக்கை. அந்நம்பிக்கை காரணமாகப் பலரும், இவ்வழியாற் செல்லும் போதாவது அம்மையை வணங்குவோமே என்னும் எண்ணத்தாற் சிலரும் வடக்கு வீதியும் கிழக்கு வீதியும் சந்திக்குமிடத்துக்கு அண்மையில் தமது வாகனங்களை நிறுத்துவர்.

அம்மையை வணங்க வேண்டுமென்னும் ஆர்வமுடையோர் ஆலய வாசலுக்குச் சென்று வணங்கியபின் தமது பிரயாணத்தைத் தொடர்வர். மறு பகுதியினர் இறைவியை வணங்குவதற்கு இரண்டு நிமிட நேரத்தைத் தானும் செலவிட விரும்பாதவர்கள் அவசரம் அவசரமாக வாகனத்திலிருந்து இறங்கி அயலிலுள்ள மதகை நோக்கி ஓடுவர். அதன் மீது கர்ப்பூரத்தைப் போட்டுக் கொழுத்தி-

விட்டு ஓட்டமும் நடையுமாகச் சென்று வாகனத்தில் ஏறித் தமது பிரயாணத்தைத் தொடர்வர். சிலர் வீதியோரத்தில் வைக்கப்பட்டிருக்கும் உண்டியலிற் சில்லறைக் காசைப் போட்டுவிட்டு, போட்ட காசு உண்டியலின் அடிப்பகுதியை அடையு முன்பே அங்கிருந்து பறந்துவிடுவர். வாகனத்திலிருந்து இறங்காமலே தாம் கொண்டு வந்த தேங்காயை மதகின் மீது எறிந்து விட்டுச் செல்வோரும் உண்டு.

இரண்டு நிமிட நேரமாவது இறைவியை இறைஞ்ச நேரமின்றி, அவ்விரு நிமிட நேரத்திலும் தம் முயற்சியினால் எண்ணற்ற காரியங்களைச் சாதித்து விடலாமெனக் கருதி, தன்முனைப்போடு செயற்படுவோர், தம்மைப் பற்றிய ஆணவத்திலிருந்து இலகுவில் விடுபட முடியாது. அவர்களுக்கு அவர்களைப் பற்றிய ஆணவத்தின் இயல்பை எடுத்துக்காட்டுவது போல, அவர்கள்பற்ற வைத்த கர்ப்பூரப் புகை படிந்து கரிய நிறத்தோடு காட்சியளிக்கிறது அந்த மதகு.

மதகில் கர்ப்பூரத்தைப் பற்றவைக்கும் போது கர்ப்பூர ஒளியும் புகையுந் தோன்றுகின்றன. மதகு அந்த ஒளியைப் பற்றாமல் புகையைப் பற்றி அதன் வண்ணமாயிருக்கிறது.

மதகு சடப்பொருள், அறிவற்ற பொருள். மனிதன் உயிர்ப்பொருள், ஆறறிவு படைத்த பொருள். ஒளிக்கும் இருளுக்கும் இடமாயிருக்கின்ற அந்த மதகைப் போல, இறையொளிக்கும் ஆணவ இருளுக்கும் இடமாயிருப்பது உயிர்.

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்" என்கின்றது கொடிக்கவி. சடமாகிய மதகினால் தன்னைப் பற்றும் புகையிலிருந்து விடுபட முடியாது. அதற்குத் தீயதை விட்டு நல்லதைப் பற்ற வேண்டும் என்றும் எண்ணம் ஏற்படவும் மாட்டாது. அந்த மதகைப் போல மனிதனும் தன்னைப் பற்றிய மல மயக்கத்திலிருந்து விடுபட்டு இறைவனைப் பற்றவேண்டும் என்னும் எண்ணமற்றிருப்பதா?

"ஏ மனிதா, என்னைப் போன்று நீயும் ஒளியைப் பற்றாது இருளைப் பற்றி நிற்பது தகுமா?" என இவ்வழியாற் போக்குவரவு செய்வோர் எல்லோரையும் கேளாமற் கேட்பது போன்ற குறிப்புடன் ஆடாமல் அசையாமல் இருக்கிறது அந்த மதகு.



அடியார்கள் மதகைப் பற்றிய சிந்தனையிலிருந்து விடுபட்டு ஆலய வாசலை அடைகிறார்கள்.

ஆலய வாசலுக்கு நேரே கிழக்கு நோக்கிச் செல்கின்றது பற்றையும் செடியும் கல்லும் முள்ளும் செறிந்த தொரு ஒழுங்கை. அது அம்மையின் அருள் வழியிற் செல்வதை விட்டு, புற வழியிற் செல்லும் எண்ணற்ற ஆன்மாக்கள் எத்துணை இடர்களை அனுபவிக்க வேண்டியிருக்கும் மென்பதை எடுத்துக் காட்டுவது போல அமைந்திருக்கிறது.

## பன்றித்தலைச்சி

பிரபலமான தலங்களில் கோயில் கொண்டெழுந்தருளியிருந்து, அருளாட்சி புரியும் தெய்வத்தின் பெயரால் அக்கோயிலின் சூழல் அல்லது கிராமம் அழைக்கப்படுவது மரபு. கேதீஸ்வரம் கோணேஸ்வரம், முனீஸ்வரம், நகுலேஸ்வரம் முதலிய இடங்களின் பெயர்கள், அவ்வவ்விடங்களில் எழுந்தருளி யிருந்து அருள்புரியும் சிவபெருமானின் பெயரோடு தொடர்புடையனவாய் இருக்கின்றன. அது போல மட்டுவிலில் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் கண்ணகி அம்மையின் பெயராக மாத்திரமின்றி, இடத்தின் பெயராகவும் பன்றித்தலைச்சி என்னுஞ் சொல் உபயோகிக்கப்படுகின்றது.

கண்ணகி அம்மையின் ஆலயத்துக்குத் தென்கிழக்குத் திசையில் உள்ளதொரு பெரிய வளவு - கோயிலுக்குச் சொந்தமில்லாத வளவு - இன்றும் பன்றித்தலைச்சி என அழைக்கப்படுகின்றது.

மாதனைத் தமிழிசைச் சங்கத்தின் வெளியீடான சிலம்பொலியில் இடம்பெறும் ஒரு பாடலில்,

"துவளிபா ணாவெட்டி அங்கணா மக்கடவை
நச்சுற்ற பன்றித் தலைச்சியில்,
விந்தைசெறி அத்துளுவில் மந்திகையில் நிற்றூவில்
மிக்கவா ழியவளையிலும்,
மேவு திரியாயிலும் கல்லிருப் பின்னரிய
மிக்கவற் றாப்பளையிலும்
வந்துவந் தேயிருந் தங்கு நிதமெனது
மனதினிற் குடிபுகுந்து
வற்றாத கிருபைதந் தேதுணைசெய் மாதனையில்
..... மருவுகண் ணகையம்மனே "



எனக் கூறப்படுகின்றது இது பன்றித் தலைச்சி என்பது இடப்பெயராக வழங்குவதற்கு மேலுமொரு உதாரணம். வடக்கு மாகாணத்தில் கண்ணகி கோயில் கொண்டிருக்கும் சில இடங்களைக் குறிப்பிடும் இப்பாடல், மாதனைக் கண்ணகை அம்மை மீது பாடப்பட்ட காலத்துக்கு முன்பே, மட்டுவிலில் கண்ணகி கோயில் கொண்டிருக்கும் இடம் பன்றித்தலைச்சி என அழைக்கப்பட்டதற்குரிய சான்றாக விளங்குகிறது.

அபிராமியந்தாதி, இராசராசேஸ்வரி அட்டகம் முதலிய நூல்களில் தேவியின் திருநாமங்களைக் கூறும் போது, வாராஹி, வராஹி முதலிய பெயர்களும் கூறப்படுவதை எடுத்துக்காட்டி, அச் சொற்களைப் பன்றித்தலைச்சி எனத் தமிழாக்கஞ் செய்து பன்றித்தலைச்சியில் கோயில் கொண்டிருப்பது பன்றித் தலையையுடைய தெய்வமெனக் கூறுவோரும் உண்டு.

இச்சந்தர்ப்பத்தில் பன்றித்தலைச்சிக் கண்ணகி அம்மைமீது பாடப்பட்ட மூன்று நூல்களைக் குறிப்பிடுவது அவசியமானதாகும். அவை :-

i. பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை (இவர் பிற்காலத்தில் பண்டிதமணி, இலக்கிய கலாநிதி முதலிய பட்டங்களைப் பெற்றவர்) அவர்கள் 1926ஆம் ஆண்டு பாடிய மட்டுவில் கண்ணகி அம்மை தோத்திரம்.

ii. மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஊஞ்சல், எச்சரீக்கை, பராக்கு மேற்படி கண்ணகை சரித்திரச் சுருக்கம்.இந் நூல் ஸ்ரீ ராமநாத சமஸ்தானம் வித்துவான் சாவகச்சேரி ஸ்ரீமத் ச. பொன்னம்பலபிள்ளை அவர்களால் இயற்றப் பெற்றது.

iii. கோவலன் கதை. இந்நாட்டார் பாடல் யாரால் எப்போது பாடப்பட்டதென்பதைக் கூற முடியவில்லை. முன்னாளில் பன்றித்தலைச்சிக் கண்ணகி அம்மை ஆலயத்தில் பங்குனித் திங்கட்கிழமைகளில் பறையடிப்பவர்களால் இப்பாடல் பாடப்பட்டுவந்தது. இப்போது அது பாடப்படுவதில்லை. கோவலன் கதை ஏடு எங்கோ மறைந்துவிட்டது.

இந்நூல்களில் எந்தநூலும் பன்றித்தலைச்சியை வராஹி எனக் கூறவில்லை, மாட்டுத் தலையைப் பன்றித்தலையாக மாற்றிய அருட்செயலை மாத்திரமே கூறுகின்றன.

ஆலய ஆவணங்கள் எதிலும் வராஹி என்னும் பெயர் இடம்பெறவில்லை, கண்ணகை என்னும் பெயரே இடம்பெறுகிறது. அதனால் இங்கு எழுந்தருளியிருக்குந் தெய்வம் மாட்டுத் தலையைப் பன்றித்தலையாக்கிய தெய்வம் எனக் கூறப்படுகின்றது.

கண்ணகி மாட்டுத்தலையைப் பன்றித் தலையாக்கிய கதை செவி வழியாக வழங்கி வருகிறது. அதனாற் போலும் மாடு கொலை செய்யப்பட்ட சம்பவம் இருவேறு விதமாகக் கூறப்படுகின்றது.

பறங்கியர் காலத்திற் புலையர்கள் ஒரு கமக்காரனுடைய மாட்டுப் பட்டியுட் புகுந்து, அங்கு நின்ற மாடுகளிற் கொழுப்பான மாட்டை அவிழ்த்துக் கொண்டு வந்து, கொலை செய்து, இறைச்சியை எடுத்த பின், மாட்டுத் தலையைப் புதைத்தார்கள் என்று கூறுகிறார் வித்துவான் ச.பொன்னம்பலபிள்ளை.

இனி இச்சம்பவம் பற்றிப் பரவலாக வழங்கி வரும் கதையை நோக்குவோம்.

கண்ணகியம்மை ஆலயத்திற் பறையடிக்கும் பத்தன் ஒருவன் தனது குலத்தொழிலான புலைத் தொழிலையுஞ் செய்து வந்தான்.

அன்றொருநாள் அவனெறிந்த கூரிய ஆயுதம் இலக்குத் தவறியோ, திருவருட் செயலாகவோ நாம் அறியோம், பசுவொன்றின் மேற்பட்டது. பசு துடித்துப் பதைத்து இறந்தது. அதைக் கண்டு வருந்திய பத்தன், தான் பசுக்கொலை புரிந்ததை யாராவது அறிந்தால் என்ன நடக்குமோ என எண்ணி ஏங்கினான்.

எதற்கும், தன் வழிபடு தெய்வத்தின் துணை இருக்கிறதே என்ற துணிவோடு, அந்தப் பசுவை ஆலயத்துக்குத் தென்கிழக்குத் திசையில், பற்றையுஞ் செடியும் நிறைந்திருந்த பனை மரக் கூடலுட் புதைத்துவிட்டான்.

நடந்த சம்பவத்தை மாட்டுச் சொந்தக்காரன் எப்படியோ அறிந்துவிட்டான். பறையர் குலப் பத்தன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. பசுக்கொலை புரிந்த பாதகத்துக்கும் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கும் பயந்த பத்தன், தனது குறையைத்



தன்வழிபடு தெய்வமான கண்ணகி அம்மைக்கு முறையிட்டு, தனக்கு அபயம் அளிக்கும்படி வேண்டினான்.

அம்மை அடியவனின் கனவில் முதிய விதவைக் கோலத்தோடு காட்சி கொடுத்தாள். " நாளையதினம் பசுக்கொலை பற்றிய விசாரணை நடக்கும். அப்போது நான் மாட்டைக் கொல்லவில்லை. பன்றியைக் கொன்று இறைச்சியை எடுத்த பின் அதன் எச்சங்களையே புதைத்தேன் என்று கூறு" என்று அருள் புரிந்தாள்.

மறுநாள் விசாரணை நடந்தது. குற்றஞ் சுமத்தப்பட்டவன் தான் மாட்டைக் கொல்லவில்லையெனவும் பன்றியைக் கொன்றதாகவும் கூறினான். புதைகுழி தோண்டப்பட்டது. என்ன அதிசயம்! மாட்டுத்தலை புதைக்கப்பட்ட இடத்தில் மாட்டுத்தலையைக் காணவில்லை, பன்றித்தலை காணப்பட்டது.

அதைக் கண்ட பத்தன் ஆடினான், பாடினான். அவ்விடத்தில் நின்றபடியே உச்சியிற் கூப்பிய கையினனாய் அன்னையைப் பணிந்தான். கண்ணீர்சோர, மெய்சிலிர்க்க, வாய்குழறி தன்னை மறந்து அம்மை தனக்கருள்புரிந்த அதிசயத்தை வாய்விட்டுக் கூறிப் பன்றித்தலைச்சி என அழைத்துப் பத்தினித் தெய்வத்தைப் பல முறை பணிந்தான்.

அங்கு நின்றோர் அனைவரும் உண்மையை உணர்ந்தனர்; பத்தனின் பத்தியை மெச்சி வியந்தனர்; பன்றித்தலைச்சியைப் பணிந்தனர். பன்றித்தலைச்சி தனது பத்தனுக்குக் கிழக்கோலத்திற் கனவிலே காட்சிகொடுத்த காரணத்தாற் போலும் இன்றும் அன்னையைப் பற்றிப் பேசும் போது 'கிழவி' எனக் குறிப்பிட்டுப் பேசுவோர் மட்டுவிலில் வாழ்கிறார்கள்.

வற்றாப்பளைக் கண்ணகை அம்மை ஆலய வரலாறும் நந்திக் கடற்கரையில் மாடுமேய்த்த சிறுவர்களுக்குக் கண்ணகி கிழக்கோலத்திலேயே காட்சி கொடுத்தாள் எனக் கூறுகிறது. எனவே கண்ணகிக்கும் அவள் கிழக்கோலத்திற் காட்சி கொடுக்கிறாள் எனக் கூறப்படுவதற்குமுள்ள பொருத்தப்பாடு சிந்திக்கத் தக்கது.

இனி, பன்றித்தலைச்சி என்பதைப் பன்றித் தலையையுடைய தெய்வமென்று கூறுதற்குரிய சான்றுகளும் உண்டா எனப்

பார்ப்போம். "ஆனைமுகன் என்பது ஆனைமுகத்தையுடைய பிள்ளையாரைக் குறிப்பது போல பன்றித்தலைச்சி என்பது பன்றித்தலையையுடைய தெய்வத்தைக்குறிக்கும்" என யாழ்ப்-பாணம் சிவதொண்டன் சபையார் பன்றித்தலைச்சி எனத் தலைப்பிட்டு இலவசமாக வெளியிட்ட பிரசுரத்திற் கூறப்படுகிறது.

1946 ஆம் ஆண்டில் கண்ணகி அம்மையின் செம்பு விக்கிரகம் ஆலயத்திற் பிரதிட்டை செய்யப்படும் வரையும், கும்பம் வைத்து அதற்குத் தங்கத்தினாற் செய்யப்பட்ட பன்றி முகத்தைச் சார்த்தி அம்மைக்குப் பூசை செய்து வந்தனர். இவ்வாறு முகஞ்சார்த்திப் பூசை செய்து வந்தமையே அம்மையைப் பன்றித்தலையுடைய தெய்வமெனச் சிவதொண்டன் வெளியீட்டிற் கூறப்பட்டமைக்குரிய காரணமாகலாம்.

பன்றித்தலைச்சி என்பது பன்றித்தலையுடைய தெய்வத்தைக் குறிக்குமெனக் கூறும் அவ்வெளியீட்டில் "பன்றித் தலையைத் தந்த தெய்வமெனினும் பன்றித்தலையுடைய தெய்வமெனினும் இரண்டுக்கும் பொருந்தப் பன்றித்தலைச்சி அம்மன் ஒரு சிறு குடிலில் இருந்து கொண்டு பெரிய அற்புதங்களைச் செய்து வருவதை நாம் கண்ணாரக் காண்கிறோம்" எனவும் கூறப்பட்-டிருக்கிறது.

இவ்வாறு, இங்கு கோயில்கொண்டிருக்கும் தெய்வம் பன்றித்தலையையுடைய தெய்வமா, பன்றித்தலையை ஆக்கிய தெய்வமா என்னும் வினாவுக்கு விடை கூறாது நழுவிச் செல்கின்றது அவ்வெளியீடு. அவ்வெளியீட்டின் கதை பிள்ளை-யையும் நுள்ளித் தொட்டிலையும் ஆட்டிய கதையாகிவிட்டது.

அம்மையின் மீது பாடப்பட்ட நூல்களெதுவும் அம்மை-யைப் பன்றித்தலையையுடைய தெய்வமெனக் கூறவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள கண்ணகை கோயில்களில் படிக்கப்பட்டு வந்த - படிக்கப்படுகின்ற - சிலம்பு கூறல், கோவலனார் கதை முதலிய நூல்கள் எல்லாம் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மையே என்பதற்குச் சான்று பகர்கின்றன. ஆலயத்தோடு தொடர்புடைய ஆவணங்களிலெல்லாம் "பன்றித்தலைச்சிக் கண்ணகை " என்ற சொற்றொடரே உபயோகிக்கப்பட்டு வருகிறது. எனவே இங்கெழுந்தருளியிருக்கும் தெய்வம் கண்ணகித் தெய்வம்,



மாட்டுத்தலையைப் பன்றித்தலையாக்கிய பத்தினித் தெய்வம் என உறுதியாக முடிவு செய்யலாம்.

அவ்வாறு முடிவு செய்யும் போது ஆதியில் கும்பத்திற் பன்றி முகத்தைச் சார்த்திப் பூசை செய்ததற்குரிய காரணம் என்ன என்னும் வினா எழுகின்றது. அவ்வினாவுக்குரிய விடையை இவ்விடத்திற் குறிப்பிட வேண்டியது அவசியமானதாகும்.

வயிரவப் பெருமான் பிரமனுடைய தலையை அரிந்து அவனை நான்முகன் ஆக்கினார். பிரமனுடைய உடலிலிருந்து இரத்த வெள்ளம் பெருகியது. வயிரவர் தனது நெற்றிக்கண் அக்கினியினால் அதனை வற்றச் செய்து பிரமனுக்கு அவனுடைய உயிரைக் கொடுத்தார். பிரமன் நல்லுணர்ச்சி பெற்றெழுந்து வயிரவப் பெருமானை வணங்கினான்.

"நான் சிவனுக்குச் செய்த குற்றங்கள் அனந்தம் .அதனால் பெரும் பழியைப் பெற்றேன். உன்னருளால் எனக்கு நல்லுணர்வு உண்டானது. எனது குற்றங்கள் அனைத்தையும் பொறுத்தருள வேண்டும்" என்று இரந்தான்.

"எம்பெருமானே, சிவதூடணத்தால் தீயதாகிச் சிறுமை பெற்றது இந்தத் தலை. இது தூய்மை அடைய வேண்டும். அடியேன் காணுந் தோறும் எனது மனமயக்கம் நீங்கும் பொருட்டு உயர்ந்த சூலப்படையைத் திருக்கரத்திற் றரித்துக் கொண்டது-போல, எனது தலையையுஞ் திருக்கரத்தில் தரித்தருள்வீராக" என்று வேண்டினான். வயிரவப் பெருமான் "அவ்வாறே ஆகுக." என்-றருளிச் செய்து பிரமன் தலையைத் தன் கரத்தில் ஏந்தியருளினார்.

இதைப் போலவே, மாட்டுத்தலையைப் பன்றித்தலை-யாக்கிய அருட் செயலை மறவாது நினைவு கூருந்தோறும் அம்மைமீது கொண்ட அன்பு பெருகுமாதலால், அதை மறவா-திருக்கும் பொருட்டு, அடியவர்கள் அம்மைக்குத் தங்கத்தாற் செய்த பன்றி முகத்தைச் சார்த்தி வழிபட்டார்கள். அந்தப் பன்றிமுகம் அம்மையின் அருட்செயலை எடுத்துக்காட்டும் அருமையான-தொரு நினைவுச்சின்னம்.

# பத்தினித் தெய்வம்

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்" என்பது குறள்

குறள் கூறுவது போலப் பத்தினிப் பெண்களுக்குப் பெருமையளிக்கப்பட்ட காலமொன்றிருந்தது. கற்பரசிகள் கடவுட்டன்மை யுடையவரெனக் கருதப்பட்டனர்.

இலங்கையில் கண்ணகிக்கும் திரௌபதிக்கும் சீதைக்கும் ஆலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

உடப்பிலும் பாண்டிருப்பிலுமுள்ள திரௌபதி ஆலயங்கள் பிரசித்தி பெற்றவை. பழுகாமம், புளியந்தீவு முதலிய இடங்களிலும் திரௌபதி கோயில்கள் இருக்கின்றன.

நுவரெலியாவிலிருந்து கக்கல பூங்காவுக்குச் செல்லும் வழியில் சிறியதொரு சீதைஅம்மை கோயில் இருக்கிறது.

கயவாகு வேந்தனால் அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணகி வழிபாடு நாடெங்கும் பரவியது. பத்தினித் தெய்யோ, என்னும் பெயரில் சிங்கள மக்கள் இன்றும் கண்ணகியை வழிபடுகின்றனர்.

ஆரம்பத்தில் கயவாகு வேந்தனால் பத்தினித் தெய்வத்துக்கு எடுக்கப்பட்ட பெருவிழாவே இன்று கண்டிப் பெரகராவாக மாறியிருக்கலாமென அறிஞர்கள் கருதுகின்றனர்.

ராசாவளி, ராசரத்தினாகர முதலிய சிங்கள நூல்கள் கயவாகு மன்னன் கண்ணகி வழிபாட்டை அறிமுகப் படுத்திய செய்தியைக் கூறுகின்றன எனவும் சிங்களத்தில் பத்தினி காவியங்கள் பல இருக்கின்றன எனவுங் கூறுவர்.

தமிழீழத்தில் அனலைதீவு, நயினாதீவு, கரம்பன், புங்குடுதீவு, வேலணை,கட்டுடை (சீரணி) மாசியப்பிட்டி (அங்கணாமைக்



கடவை) கந்தரோடை, ஊரெழு,உடுவில், மாவிட்டபுரம், அம்பாவளை, துவளி, பாணாவெட்டி, வேம்பிராய், நுணாவிற் குளம், பன்றித்தலைச்சி, மண்டுவில், சுட்டிபுரம், போக்கட்டி, கச்சாய், செல்லியாதீவு, பொறிக்கடவை, மிருசுவில், கரம்பகம், விழுபளை, நாகர்கோயில், அறத்தி, திரியாய், கண்ணகை தோட்டம், கன்னார்வயல், கலவெட்டித்திடல், வன்னிப்புதுக்குளம், வன்னிவிளாங்குளம், கல்லிருப்பு, முள்ளிப்பளை, வற்றாப்பளை, சாம்பற்றீவு, திருகோணமலை, பாலம்பட்டாறு தம்பலகாமம், ஆரையம்பதி, கோராவெளி, கொக்கட்டிச்சோலை, பட்டிமேடு, தம்பிலுவில், காரைதீவு, வீரமுனை, கல்முனை, கல்லாறு, மகிழூர்,எருவில், செட்டிபாளையம், புதுக்குடியிருப்பு, முதலைக் குடா, சிற்றாண்டி, வந்தாறுமூலை முதலிய இடங்களில் கண்ணகி கோயில்கள் இருப்பதாக நூல்களிலிருந்து அறியமுடிகிறது. இதிற் குறிப்பிடாத இடங்களிலும் கண்ணகி கோயில்கள் இருக்கலாம்.

மட்டக்களப்பில் இன்றும் கண்ணகி வழிபாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

கண்ணகியின் கதைக்குக் காப்பிய வடிவங்கொடுத்த இளங்கோவடிகள் கண்ணகியைக் கடவுளின் அவதாரமாகக் காட்டவில்லை, கற்பரசியாகவே காட்டுகின்றார்.

கோவலன் கொலைசெய்யப்பட்டது காரணமாகப் பாண்டி-யனது அரச சபையில் வழக்குரைத்த கண்ணகி, மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும் கண்ணிற் சொரியும் கண்ணீருமாக,

" பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோ டொழிப்பேன் மதுரையும்.."

*(வஞ்சினமாலை 37-38)*

என வீரசபதமெடுத்துத் தன் இடமுலையைத் திருகி மதுரை நகர வீதியில் எறிகிறாள். அப்போது அவளுக்குமுன் அக்கினி தேவன் தோன்றி,

"மாபத்தினி நின்னை மாணப் பிழைத்தநாள்
பாயெரி இந்தப் பதியூட்டப் பண்டேயோர்
ஏவல் உடையேனால்..." *(வஞ்சினமாலை 50-53)*

என்கிறான்.

இக்கூற்று, கண்ணகி! நான் மதுரையை எரிக்கப்போகிறேன். நான் மதுரையை எரிக்கப்போவது, நீ மதுரையை ஒழிப்பேன் எனச் சபதமிட்டதற்காகவோ, பாண்டியன் உனக்குத் தவறிழைத்தான் என்பதற்காகவோ, அவன் மீது கொண்ட கோபத்தாலோவல்ல. பாண்டியன் உனக்குத் தவறிழைத்த நாளில் மதுரையை எரிக்கும்படி எனக்கு முன்பே ஆணையிடப்பட்டிருக்கிறது என அக்கினி தேவன் கூறியதாக அமைந்திருக்கிறது.

இதனால் எப்போது மதுரை எரியுமென்னும் நியதியொடு பொருந்தக் கண்ணகியின் சூளுரை அமைந்ததே தவிர, கண்ணகியின் ஆற்றலால் மதுரை எரியவில்லை என்பதும் இந்நிகழ்ச்சி கண்ணகி வாயிலாக நிகழ்வதற்கும் ஊழே காரணமென்பதும் பெறப்படும்.

மதுரை எரிகிறது. மதுரையை எரித்த வீரபத்தினி முன் மதுராபதித் தெய்வம் தோன்றுகின்றது. அத்தெய்வத்தின் கூற்றாக,

" மறைநா ஓசை யல்லது யாவதும்
மணிநா ஓசை கேட்டதும் இலனே
அடிதொழுது இறைஞ்சா மன்ன ரல்லது
குடிபழி தூற்றுங் கோலனும் அல்லன்."

*(கட்டுரை காதை 31-34)*

எனப் பாண்டியனைப் புகழ்ந்து கூறுகிறார் இளங்கோ. கோவலன் கொலையுண்டமைக்குக் காரணம் அவனது பழ வினையேயன்றிப் பாண்டியனின் கொடுங்கோன்மையன்று. வல்வினை வளைத்த கோலை மன்னவன் செல்லுயிர் நீத்துச் செங்கோலாக்கினான் என்பதை எடுத்துரைத்து, அக்கினி தேவனின் கூற்றை, மதுராபதித் தெய்வத்தைக் கொண்டு உறுதிப்படுத்துவிப்பது போல,

ஆடித்திங்கள் பேரிருட் பக்கத்து
அழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரி யுண்ண
உரைசால் மதுரையோடு அரைசுகே டுறு மெனும்
உரையு முண்டே நிரைதொடி யோயே

*(கட்டுரைகாதை 133-137)*

என மதுராபதித் தெய்வத்தின் கூற்றாகக் கூறுகிறார் இளங்கோ.



(பேரிருட்பக்கம் - கிருஷ்ணபக்கம். அழல்சேர்குட்டம் - கார்த்திகையின் குறை சேர்ந்தநாள்.)

தொடர்ந்து கண்ணகியின் பிறப்புக்குரிய காரணத்தை, மதுராபதித் தெய்வம் கண்ணகிக்குக் கூறுவதுபோலக் கூறி, கண்ணகி பசு வர்க்கத்தினளே என்பதை உறுதிப்படுத்துகிறார் இளங்கோ.

கலிங்க நாட்டிலுள்ள வளமான வயல்கள் நிறைந்த சிங்கபுரத்தை வசுவும் மூங்கிற் காடுகள் நிறைந்த கபிலபுரத்தைக் குமரனும் ஆண்டு வந்தனர் . அவர்கள் இருவரும் உரிமைச் சுற்றத்தவர். ஏதோ காரணத்தால் அவர்களுக்கிடையே பகைமை ஏற்பட்டுப் போர் மூண்டது. அது காரணமாக இரண்டு நாடுகளுக்கும் இடைப்பட்ட ஆறு காவத தூரத்துள் போவோர் வருவோர் எவரும் இலராயினர்.

கபிலபுரத்து வணிகனான சங்கமன் பொருளாசை காரணமாக அரிய ஆபரணங்களை எடுத்துக் கொண்டு, கள்ளத்தனமாகத் தனது காதல் மனைவியுடன் சிங்கபுரத்துள் நுழைந்தான். அங்குள்ள ஒரு அங்காடியை அடைந்து தான் கொண்டு சென்ற அணி கலன்களை விலை கூறி விற்றான்.

பரதன் என்பவன் சிங்கபுரத்து அரசனுக்கு அரச கருமஞ் செய்பவன், நல்லொழுக்கம் இல்லாதவன், கொல்லாமை என்னும் விரதத்தினின்றும் நீங்கியவன், எல்லோராலும் வெறுக்கப்படுபவன். அவன் அணிகளை விற்றுக் கொண்டிருந்த சங்கமனைப் பிடித்துக் கொண்டு அரசனிடஞ் சென்று, அவனை ஒற்றனெனக் குற்றஞ் சாட்டினான். சங்கமன் செய்யாத குற்றத்துக்காகக் கொலை செய்யப்பட்டான்.

சங்கமனின் மனைவி நீலி. அவள் இருக்கவும் இடமின்றி அலைந்தாள். தன் கணவன் அநியாயமாகக் கொலைசெய்யப்பட்ட சம்பவத்தை மன்றிலுந் தெருவிலும் எடுத்துரைத்தாள். அரசருக்கும் பரதருக்கும் ஊராருக்கும் சேரிகளில் வாழ்வோருக்குங் கூறினாள்.

பதினான்கு நாட்கள் கழிந்தன. அன்று தான் தன் கணவனைத் தொழும் நாளெனக் கருதினாள் நீலி. அவள் தன் கணவனை வாழ்த்தினாள். மலையொன்றில் ஏறி அதன் சிகரத்தின்

உச்சியை அடைந்தாள், இறந்த தன் கணவனைச் சேரக் கருதினாள். எனக்கு இத்துன்பத்தை விளைத்தவருக்கு எப்படியேனும் இத்தகைய துன்பம் வருவதாக எனச்சாபமிட்டு மலையிலிருந்து குதித்து உயிர் துறந்தாள். அவளிட்ட சாபம் பலித்தது.

"சங்கமனைக் கொலை செய்த பரதனே கோவலன். நீ பரதனின் மனைவி. பதினான்கு நாட்களின்பின் வானோர் வடிவில் காண்பதல்லது மனித வடிவில் உன் கணவனைக் காணமாட்டாய்" என மதுராபதித் தெய்வம் கண்ணகிக்குக் கூறியதாக இளங்கோ கூறுங் கண்ணகியின் பழம் பிறப்பின் வரலாறு, மணிமேகலையிலுங் கூறப்படுகிறது.

தந்தை கோவலனையுங் கண்ணகியையுங் தரிசிக்க விரும்பிய மணிமேகலை வஞ்சி மாநகருக்குச் சென்று, கண்ணகி கோயிலுட் புகுந்து, கண்ணகி மதுரையை எரித்ததற்குரிய காரணத்தைக் கேட்கிறாள்.

அப்போது கண்ணகி, மதுராபதி என்னுந் தெய்வந் தனக்கு முன் தோன்றி, தனது பழம்பிறப்பை உணர்த்திய செய்தியையும் முற்பிறவிகளில் தாம் செய்த நல்வினைப் பயனாகத் தாம் தேவர்களாகிச் சென்றதையும் கோபங் காரணமாகத் தான் செய்த பாவப் பயனையும் அனுபவிக்க வேண்டிவரும் எனவுஞ் சொல்லுகின்றாள்.

இதன்றி,

"....இருவினை உய்த்து மைப்போல
நீங்கரும் பிறவிக் கடலிடை நீந்திப்
பிறந்தும் இறந்தும் உழல்வோம்."

*(39-41, மணிமேகலை வஞ்சி மாநகர் புக்ககாதை)*

எனவும்

" துறவி உள்ளம் தோன்றித் தொடரும்
பிறவி நீத்த பெற்றியம் ஆகுவம்
அத்திறம் ஆயினும் அநேக காலம்
எத்திறத் தார்க்கும் இருத்தியும் செய்குவம்"

*(58-61, மணிமேகலை வஞ்சி மாநகர் புக்ககாதை)*

எனவும் கண்ணகி மணிமேகலைக்குக் கூறியதாக மணிமேகலை கூறுகிறது. (இருத்தி -சித்தி). இச்சித்தியினாற் போலும் கண்ணகி



தன்னை வழிபடுவோருக்கு அவர்கள் வேண்டும் உலகியல் இன்பங்களைக் கொடுக்கிறாள்.

மதுராபதியின் கூற்றைக் கேட்ட கண்ணகி, மதுரையில் மேற்றிசை வாயில் வழியாக வெளியேறித் திருச் செங்கோட்டை அடைகிறாள். அவளைக் கண்ட குறக்குடியினர், " மனம் நடுங்க முலையிழந்து வந்து நின்றீர் யாவிரோ நீவிர்?" என வினவ

"மண மதுரையோடு அரசு கேடுற
வல்வினை வந்து உருத்த காலைக்
கணவனை அங்கு இழந்து போந்த
கடுவினையேன் யான்...." *(குன்றக் குரவை 5-6)*

என மதுரையோடு அரசும் அழிந்ததற்கு ஊழே காரணமெனக் கண்ணகியின் கூற்றாகக் கூறுகின்றார் இளங்கோவடிகள்.

இந்நிகழ்ச்சிகளையெல்லாம் சாத்தனார் கூறக்கேட்ட சேரன் செங்குட்டுவன்.

" வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது"

*(காட்சிக்காதை 99-100)*

எனப் பாண்டியனைப் புகழ்ந்துரைத்தான்.

பாண்டியனின் செங்கோன்மையைப் புகழ்ந்துரைத்த சேரன் செங்குட்டுவன் அரசமாதேவியை நோக்கி, பாண்டியன் இறந்து விட்டான் என்பதை அறிந்தவுடன் தன்னுயிர் நீத்த பாண்டிமாதேவியா, சினத்தொடு வந்த கண்ணகியா சிறந்தவள் என வினாவுகிறான்.

"காதலன் துன்பம் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு உறுக வானகத்து"

*(காட்சிக் காதை 111-112)*

என்று கூறிய சேரமாதேவி, ஆனாலும்

நம் அகல்நாடு அடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்.

*(காட்சிக் காதை 113-114)*

என்கிறாள்.

அதைக் கேட்ட செங்குட்டுவன் பொருவறு பத்தினிக்குக் கடவுட்சிலை செய்யப் பொற்கோட்டு இமயத்துக் கற்கொண்டு, கங்கையில் நீர்ப்படை செய்து, அதைக் கனக விசயர் தலைமிசை யேற்றி வந்து பத்தினித் தெய்வத்துக்கு ஆலயம் அமைத்து விழா எடுத்தான்.

அவன் கட்டிய கோயிலே மலையாள நாட்டில் கொடும்பாளூர் சிறாங்கனூர் நகரிலிருக்கும் ஒன்றை முலைச்சி அம்மன் கோயில் எனக் கூறுவோரும், மதுரை மாவட்டம் கூடலூர் வனச்சரம் வண்ணாத்திப் பாறை வன எல்லைக்குள் மங்கலதேவி மலைமுகட்டில் கடல் மட்டத்திலிருந்து ஐயாயிரம் அடி உயரத்திலிருக்கிறதெனக் கூறுவோரும் கேரளாவில் திருச்சூரிலிருந்து 45 கி.மீ தொலைவிலும் குருவாயூரிலிருந்து 50 கி.மீ தொலைவிலும் எர்ணா குளத்திலிருந்து 55 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ள பகவதி அம்மன் கோயிலெனக் கூறுவோரும் உண்டு. அதனால் சேரன் செங்குட்டுவன் கட்டிய கோயில் எது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை, அத்துறையில் ஆய்வு செய்ய வல்லவர்களிடம் விட்டு விடுவோம்.

சேரன் செங்குட்டுவன் தானமைத்த ஆலயத்திற் கண்ணகிக்குக் கடவுள் மங்கலஞ் செய்யும்படி ஏவிய நிகழ்ச்சியைச் சிலப்பதிகாரம் பின்வருமாறு கூறுகிறது.

" மேலோர் விழையும் நூனெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து
இமையவர் உறையும் இமையச் செவ்வரைச்
சிமையச் சென்னித் தெய்வம் பரசிக்
கைவினை முற்றிய தெய்வப் படிமத்து
வித்தகர் இயற்றிய விளங்கிய கோலத்து
முற்றிழை நன்கலம் முழுவதும் பூட்டிப்
பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்தி
வேள்வியும் விழாவும் நாள்தொறும் வகுத்து
கடவுள் மங்கலம் செய்கென ஏவினன"

*( நடுகற் காதை 224-233)*

இப்பகுதியும் சேரன் செங்குட்டுவன் கட்டிய கோயில் பத்தினி கோயில் என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.



(மங்கலம் - பிரதிட்டை, வேள்வி - ஓமம், படிமம் - வடிவம்)

செங்குட்டுவன் இமயத்து உச்சியிலுள்ள கடவுளை- சிவனை வணங்கிய பின்பே கண்ணகிக்குக் கடவுள் மங்கலம் செய்யும்படி கட்டளையிடுகிறான். கடவுள் மங்கலம் செய்யப்படுகின்றது. அதன் பின்பு நிகழ்ந்த நிகழ்ச்சிகளை வாழ்த்துக் காதை, வரந்தரு காதை என்னுங் காதைகளில் இளங்கோ கூறுகிறார். சேரன் செங்குட்டுவனை மாடல மறையோன் வாழ்த்துகையில்,

"ஆன்ஏறு ஊர்ந்தோன் அருளில் தோன்றி
மாநிலம் விளங்கிய மன்னவன் ஆதலின்"

*(வரந்தருகாதை 141-142)*

என்று அவனது சிவநெறிச் சார்பைச் சிறப்பிக்கின்றான். சேர மன்னன் சிவநெறியில் நின்றுகொண்டே பத்தினித் தெய்வத்துக்கு ஆலயம் அமைத்தான். அவன் சிவநெறியோடு பத்தினி வழிபாட்டைத் தொடர்புபடுத்தவில்லை. கண்ணகியின் கடவுள் மங்கல விழாவில்,

" குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் "

*(159 - 160 வரந்தருகாதை)*

கலந்து கொண்டனர்.

" கடல்சூழ் இலங்கைக் கயவாகு வென்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்ட முந்துறுத்தாங்கு, அரந்தை கெடுத்து வரந்தருமிவளென ஆடித் திங்களகவையின் ஆங்கோர் பாடி விழாக்கோள் பன்முறையெடுப்ப மழை வீற்றிருந்து, வளம்பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று" எனச் சிலப்பதிகார உரைபெறு கட்டுரை கூறுகின்றது.

கண்ணகிக்குக் கடவுள் மங்கலஞ் செய்த நிகழ்ச்சியிற் பங்கு பற்றிய கயவாகு வேந்தன். அங்கிருந்து இலங்கைக்குத் திரும்பியபோது, சம்புத்துறை வழியாகவே வந்திருக்க வேண்டுமெனவும் அவன் கந்தரோடையிலுள்ள அங்கணாமைக் கடவையில் கண்ணகைக்குக் கோயில் அமைப்பித்துத் தனது உருவச் சிலையையும் ஆலய முன்றிலில் அமைத்திருக்கலாமெனவும் முதலியார் சி.இராசநாயகம் கருதுகிறார். (Ancient Jaffna. P 74)

மகாவம்சத்தின் படி கயவாகு வேந்தனின் காலம் கி.பி 171-196. எனவே கண்ணகி வழிபாடு இவனது காலத்தில் - கி.பி இரண்டாம் நூற்றாண்டில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட தென்பது அனைவராலும் ஒத்துக்கொள்ளப்படுகிறது.

ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தில் சிலப்பதிகாரம் என்னும் நூல் இங்கே பெரிதும் வழங்கியுள்ளது என்பதற்குப் பல சான்றுகள் உளவெனவும் வீரவரோதய சிங்கையாரியன் காலத்தில் கண்ணகி கோயில்கள் யாழ்ப்பாணத்தில் உண்டாயினவெனச் சரித்திரங் கூறுவதாகவும் வித்துவான் சி.கணேசையர் கூறுகிறார். (ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் பக்கம் 7)

இலங்கையில் சிவாலயங்கள் பல அமைக்கப்பட்டிராத சைவ சமய நூல்களைத் தமிழ்மொழியிற் காணமுடியாதிருந்த, சைவாலயங்களை அமைப்பதற்கு அரசின் உதவியோ வேறுவித உதவியோ வழங்கப்படாதிருந்த, சைவ சமயிகளுக்குத் தலைமையோ நெறிப்படுத்தலோ இல்லாதிருந்த அக்காலத்தில், அரசர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கற்புக்கரசி கண்ணகியின் வழிபாடு எம்மக்கள் மத்தியில் வேதமாகக் பரவி வேரூன்றியதில் வியப்பெதுவுமில்லை. சிலப்பதிகாரம், படித்தவர்கள் மத்தியிற் செல்வாக்குப் பெற்றிருந்ததும் கண்ணகி வழிபாடு பரவியதற்கான இன்னொரு காரணமாகலாம்.



## கண்ணகை கதைகள்

தென் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட கண்ணகி வழிபாடு இங்கு வேரூன்றியது.

கி.பி 7 ஆம் நூற்றாண்டில் அப்பரும் சம்பந்தரும் தோன்றித் தமிழகமெங்கும் தலயாத்திரை மேற்கொண்டு பரசமய கண்டனமுஞ் சிவமதத்தாபனமுஞ் செய்தனர்.

கி.பி.9 ஆம். நூற்றாண்டில் முற்பகுதியிற் றோன்றிய சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையைப் பாடித் திருத்தொண்டர் புராணம் உருவாக உதவினார். இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த மாணிக்கவாசகர் புத்தரை வாதில் வென்றதுடன் தித்திக்குந் திருவாசகத் தேனைத் தமிழுலகுக்குத் தந்தார்.

கி.பி. 13 ஆம் 14 ஆம் நூற்றாண்டுகளில் சந்தானாசாரியர்கள் சைவத் தமிழுலகுக்கு மெய்கண்ட சாத்திரங்களைத் தந்தனர். இந்நிகழ்ச்சிகள் தமிழகத்தில் மாத்திரமன்றி இலங்கையிலும் சைவ சித்தாந்தச் செந்நெறிக்குப் புத்துயிர் அளித்தன.

சோழர் இலங்கையை ஆண்ட காலத்தில் இங்கு சைவ சமய வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட்டது. யாழ்ப்பாணத் தமிழரசும் இங்கு சைவநெறி தழைப்பதற்குச் சாதகமாகவே அமைந்தது.

நால்வர் நாயன்மார்களும் சிறுதெய்வங்களை வழிபடுவதன் சிறுமையையும் சிவவழிபாட்டின் சிறப்பையும் எடுத்துரைத்திருக்கிறார்கள்.

" கூறுமின் னீர்முன் பிறந்திங் கிறந்தமை
வேறொரு தெய்வத்தின் மெய்ப்பொருள் நீக்கிடும்
பாறணி யுமுடல் வீழவிட் டாருயிர்
தேறணி வோமிது செப்பவல் லீரே" என்கின்றார் திருமூலர்.

முன் இங்கு பிறந்து இறந்தமை கூறுமின் - சிவபெருமான் இவ்வுலகிற் பிறந்திறந்த வரலாறிருந்தாற் கூறுங்கள். வேறொரு தெய்வத்தின் மெய்ப்பொருள் நீக்கிடும்- (இறந்து பிறக்கின்ற) வேறொரு தெய்வத்தை மெய்ப்பொருள் என்று கூறுவதை விட்டுவிடுங்கள். வீழ பாறணியும் உடல் விட்டு - இறந்தவுடன் பருந்துகள் சூழ்ந்து வட்டமிடும் உடற்பற்றை விட்டு, உயிர் தேறணிவோம் - உயிரைத் தெளிவடையச் செய்வோம். இது செப்ப வல்லீரே - (சொல்ல) வல்லவர்களே இவ்வுண்மையைப் பிறருக்குச் சொல்லுங்கள் என்பது மேலே தரப்பட்ட பாடலின் பொருள்.

இவ்வாறான கருத்துக்களைக் கூறுந் திருமுறைகளையும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் கற்றுத் தெளிந்தோர் சிவ வழிபாட்டை உறுதியாகப் பற்றினர்; சிறு தெய்வ வழிபாட்டைக் கைவிட்டனர். பலர் எவ்வித சிந்தனையுமின்றிக் கல்லுவைத்த இடமெல்லாங் கடவுள் திருக்கோயிலென்னும் எண்ணத்தோடு தமது வழமையான வழிபாட்டைத் தொடர்ந்தனர்.

மேலே கூறப்பட்ட இருவகையினருக்கும் இடைப்பட்ட, சைவ சித்தாந்தம் பற்றி அறிந்தும் அதைப்பற்றித் தெளிவற்ற, சிறுதெய்வ வழிபாட்டின் சிறுமையை உணர்த்தும் பழக்கங் காரணமாக அதைக் கைவிட விரும்பாத சிலர் சிவநெறிக்கும் சிறுதெய்வ வழிபாட்டுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்த விரும்பினர்.

அவ்வகையில் கண்ணகி வழிபாட்டையும் சிவநெறியையுந் தொடர்புபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் முக்கியமானது கண்ணகியைச் சிவசக்தியின் அவதாரமாகச் காட்ட எடுக்கப்பட்ட முயற்சியாகும். அது காரணமாகக் கண்ணகை கதைகள் தோன்றின.

கோவலனார் கதையும் சிலம்பு கூறலும் மட்டக்களப்புப் பகுதியில் வழங்கும் வழக்குரை காவியம், வசந்தன் கவிகள் முதலியனவும் இவ்வகையில் அடங்கும்.



சிலப்பதிகாரம் கூறும் கண்ணகி கதைக்கும் கண்ணகை கதைகளுக்குமிடையிற் பல வேறுபாடுகள் உண்டு. கண்ணகியும் கோவலனும் பழவினை காரணமாகப் பிறந்தவர்கள் என்கின்றது சிலப்பதிகாரம். கண்ணகை பாண்டியனைப் பழிவாங்குவதற்காக அவதரித்தவள் என்கின்றன கண்ணகை கதைகள். கண்ணகி கற்புடைய பெண் என்கின்றது சிலப்பதிகாரம். கண்ணகை கடவுளின் அவதாரம் என்கின்றன கண்ணகை கதைகள்.

மதுரையை எரித்த கண்ணகி அங்கிருந்து திருச்செங்-கோட்டுக்குச் சென்றாள். அப்போது அவள் சீற்றந் தணிந்திருந்தாள் என்கின்றது சிலப்பதிகாரம். மதுரையை எரித்த கண்ணகை இலங்கைக்குச் சீற்றத்தோடு வந்தாள் என்கின்றன கண்ணகை கதைகள்.

சேரன் செங்குட்டுவன் தன்னாட்டை யடைந்த கற்பரசி கண்ணகிக்குப் பத்தினிக் கோட்டம் அமைத்தான் என்கிறது சிலப்பதிகாரம். இங்கிருந்த பத்தர்கள் இலங்கைக்கு வந்த கடவுட் கண்ணகைக்கு அவள் தரித்துச் சென்ற இடங்கள் தோறும் ஆலயங்களை அமைத்தனர் என்கின்றன கண்ணகை கதைகள். இவ்வேறுபாடுகளைத் தவிர இலங்கைக்குக் கண்ணகி வழி-பாட்டைக் கொண்டுவந்தவன் கயவாகு வேந்தன் என்னும் வரலாற்றுப் பின்னணியும் உண்டு. இவற்றைப் பின்னணியாகக் கொண்டு கண்ணகை கதைகளை நோக்குவோம்.

கண்ணகையின் வரலாறு பற்றிக் கூறும் நூல்களில் ஒன்றான வழக்குரை காவியம் அவளின் பிறப்புப் பற்றிக் கூறுவது வருமாறு:

பராசர முனிவரின் மகளின் அரிய குணத்தையும் அழகையுங் கண்டு மகிழ்ந்த சிவபெருமான், அவள் பூவுலகில் தெய்வமாகப் போற்றப்படும் தகைமையுடைய ளாதலால், அவளுக்குக் கற்புக்-கரசியாக விளங்கவும் பத்தினித் தெய்வமாக வணங்கப்படவும் வரங் கொடுத்தார்.

அவ்வேளையில் தன் தவப் பேற்றினால், சிவனைப்போல நெற்றிக் கண்ணோடு விளங்கிய பாண்டியனின் நெற்றிக்கண் நீங்க வேண்டுமென நீண்ட காலமாகத் தனக்கிருந்த ஆசையைப் பார்பதிதேவி பரமேசுவரனிடம் தெரிவித்தார்.

பராசர முனிவரின் மகள் பூலோகத்திற் பிறக்கவேண்டிய இடமாகப் பாண்டிநாடு கற்பிக்கப்பட்டது.

பாண்டி நாட்டிலே புதுமையானதொரு மாங்கனி காணப்பட்டது. அதனைப் பறிப்பதற்காக யாராவது மரத்தில் ஏறினால், அது ஏறுபவரின் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிடும். இச் செய்தியை அறிந்த அரசன் அக்கனியைப் பறிக்க விரும்பினான். சில முனிவர்களின் யோசனைப்படி அதை அம்பினால் அறுத்தான். அறுக்கப்பட்ட கனி நிலத்தில் விழவில்லை; அந்தரத்தில் தொங்கியது. அதைப் பிடிப்பதற்காக அரசன் தன் கையை நீட்டினான். அது நெருப்புருண்டையாய் மன்னனின் கையில் விழுந்தது. அதனால் அதை நிலத்தில் எறிந்த அரசன் தன் கையால் நெற்றி வியர்வையைத் துடைத்தான். மாங்கனியைத் தொட்டகை பட்டதும் அவனது நெற்றிக்கண் மறைந்தது.

மன்னன் மனம் வருந்தினான். நிலத்திற் கிடந்த மாங்கனியை எடுத்து அதை அரசியிடங் கொடுத்து நடந்த சம்பவத்தைக் கூறினான். அரசி அக்கனியை ஒரு பொற்குடத்திலிட்டு வைத்தாள். மூன்றாம் நாள் அக்குடத்தை அரச சபைக்கு எடுப்பித்துப் பார்த்த போது மாங்கனி அழகிய பெண்குழந்தையாக மாறியிருந்தது. அதைக்கண்ட அனைவரும் அதிசயித்தனர்.

இந்நிகழ்ச்சி, பீடுறுமதுரை அரசோடழியக் காரணமாகுமெனக் காலக்கணிதர் கூறியதனால், மன்னன் குழந்தையைப் பேழையில் வைத்துக் கடலில் விட்டான். அக்குழந்தையே மாநாய்கனின் வளர்ப்பு மகளாக வளர்ந்து கோவலனை மணந்து சிலம்பு காரணமாக வழக்குரைத்து மதுரையை எரித்த கண்ணகை.

இனி, இன்னொரு கதையை நோக்குவோம் மதுரை மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் வெளிமண்டபத்தில் வணிகன் ஒருவன் காளிதேவியின் திருவுவைத் தாபித்து, அதற்குப் பூசை செய்து வந்தான். இதையறிந்த பாண்டிய மன்னன் அம்பாள் ஆலயத்தில் காளியைப் பிரதிட்டை செய்வது அடாதெனக் கூறி அதை அவ்விடத்திலிருந்து எடுப்பித்தான்.

அதனாற் கோபமடைந்த காளிதேவி பாண்டியனைப் பழிவாங்கக் கருதி, பாண்டிமாதேவியின் கருவிற் புகுந்து



பாண்டியனின் மகளாகிப் பிறந்தாள். காலக் கணிதர், அக்குழந்தையால் தந்தைக்கு மரணமும் நகருக்கு நாசமும் ஏற்படுமெனக் கூறினர். பாண்டியன், சோதிடர் கூறிய யோசனைப்படி குழந்தையைப் பேழையிலடைத்துக் கடலில் மிதக்க விட்டான். மாநாய்கன் அக்குழந்தையைக் கண்டெடுத்து வளர்த்தான். அக்குழந்தையே கண்ணகை எனச் சிலம்புகூறல் என்னும் நூல் கூறுகிறது.

மதுரையை எரித்தபின்பும் சினந் தணியாத கண்ணகை அங்கிருந்து இலங்கைக்குவந்து, வெவ்வேறிடங்களிற் கோயில் கொண்டு ஆங்காங்கே அடியவர் புரிந்த பூசனையாலும் குளிர்த்தியாலுங் குளிர்ந்தாள் எனவும் கூறுகிறது சிலம்பு கூறல்.

மட்டக்களப்பில் வழங்கும் வசந்தன் கவிகளில் இடம்பெறும் அம்மன் பள்ளு, மாதவியின் நடன அரங்கேற்றத்தின் போது, அவளது ஆடலழகைக் கண்டு மகிழ்ந்த பாண்டியன் அவளை வியந்து சிரித்தானென்றும் மதுரையின் தெய்வமான தன்னை மறந்து மாதவியை வியந்த அரசனது சிரிப்பைப் பொறுக்க முடியாத பரமேசுவரியின் நெற்றிக் கண்ணிலிருந்து பறந்த பொறி மாங்கனியாயிற்றெனவும், அக்கனியை அரசன் பாண்டிமாதேவியிடங் கொடுக்க, அவள் அதையொரு பொற்குடத்திலிட்டு வைத்தாளெனவும் மூன்றாவது நாள் குடத்தை யெடுத்துப் பார்த்தபோது, மாங்கனி பெண் குழந்தையாக மாறியிருந்த தென்றும் கண்ணகையின் பிறப்பை வழக்குரை காவியத்திலிருந்து சிறிது வேறுபடுத்திக் கூறுகிறது.

9. "ஆடும் பரதந் தனைக்கண் டரசனும்- வழுத்திச் சபையில்
அகமகிழ்ந் தினிதாக நகைத்தனன்
நீடு மரசன் நகைத்த நகைகண்டு பரமேஸ்வரியும்
நிறை சபை தனில் உருப்படாமலே

10. உருவில் லாத மாய மாகியே - நுதல்விழிதனில்
ஒரு பொறி கவிழ்ந் துறக்க மானதே
விருத ராசர் புகழ்தென் பாண்டியன் வீற்றிருக்கிற
வேளை யன்னதில் மாங்கனி யானதே"

என்கின்றது அம்மன் பள்ளு.

பன்றித்தலைச்சியிற் படிக்கப்பட்டு வந்த கோவலன் கதை,

" அத்தாய்ப் பதியில் வாழும் அம்பிகையாளே
அம்பிகையாளே உன்னை நம்பினேன் தாயே"

என ஆரம்பித்து

" சீருற்ற மதுரை நகர் மாறனுடை அகந்தையால்
செப்புக் குடத்தில் மாங்கனி யதாகிச்
செழியனுடன் வாதாடிச் சிலம்பினால் தீப்பரப்பி..."

எனக் கண்ணகையின் அவதாரம் பற்றிக் கூற ஆரம்பிக்கிறது.

மந்திகைக் கண்ணகை அம்மை கோயிலில் ஆண்டு தோறும் வைகாசி மாதத்திற் படிக்கப்பட்டுவரும் கோவலனார் கதையில் கண்ணகையின் அவதாரம் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது.

தக்கன் சிவனை வேள்வித் தலைவனாகக் கொள்ளாது சிவநிந்தனையோடு கூடிய யாகத்தைச் செய்தான். அதையழிக்கத் திருவுளங் கொண்ட சிவபெருமான் ஆயிரங் கோர முகங்களும் இரண்டாயிரங் கைகளும், மூவாயிரம் விழிகளும் மதியும் பணியுங் கொண்ட திருமுடியுமுடைய தொரு திருவுருவங் கொண்டார். அப்போது பார்வதியினுடைய கண்களிலிருந்து தீப்பொறி பறந்தது. கொடியோர் மயங்க, தவசிகள் துதிக்கக் காளியம்மன் உமையின் வடிவாய்ப் பூமியில் தோன்றி தான் செய்ய வேண்டிய தென்னவெனத் தன் தாய் தந்தையரைக் கேட்டாள்.

மதுரையிலுள்ள ஆலவாய் வீதிக்குச் சென்று அதைக் காவல் புரியுமாறு சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினார். அவ்விடத்துக்குச் சென்ற காளிதேவி ஆலவாய்க் கோபுரவாசலைக் காவல் புரிந்தாள். அங்கே (கோபுர வாசலில்) காளிதேவிக்கும் பூசை நடைபெற்றது. அதையறிந்த பாண்டியன் காளிக்குப் பூசை செய்வதைக் தடுத்தான் அதனால் எவரும் காளிக்குப் பூசை செய்யவில்லை.

அப்போது கோவலன் ஆயர்குலத் தலைவனாகப் பிறந்திருந்தான். அவன் சிவனருளால் தான் வளர்க்கும் மந்தையோடு வந்து காட்டின் அருகே தங்கினான். அவனது ஆடு மாடுகள் மலட்டுத் தன்மையாலும் புலி பிடித்தும் அழிந்து கொண்டிருந்தன. அதனால் அவன் ஆலவாய்க்குச் சென்று, தனது ஆடு மாடுகளைக் காப்பாற்றும்படி வேண்டி, ஆயிரந் திருவிளக்கேற்றுவதாகக் கூறிக் காளியை வழிபட்டான். காளி ஆயர் குலத் தலைவனுக்கு அருள் புரிந்தாள். அவனுடைய ஆநிரை தழைத்தது. தனது தடையுத்தரவை மீறி ஆயன் காளிக்கு ஆயிரம் விளக்கேற்றியதை யறிந்த பாண்டியன் அவன் மீது கோபங் கொண்டான். கோயிலுக்குச் சென்று விளக்கேற்றுபவனை வெட்டிக் கொலை செய்யும்படி தனது ஏவலாளருக்குக் கட்டளையிட்டான்.



ஏவலாளர் ஆயனின் தலையை வெட்டினர். வெட்டுண்ட சிரம் அலறியபடியே உருண்டு புரண்டு சென்று, காளிதேவியின் திருவடிகளில் விழுந்து அபயங் கோரியது.

காளிதேவி சினந்தாள். " நான் மதுரையை அழிப்பேன்; தீப்பரப்புவேன்; அரசனை ஒழிப்பேன். நீ போய்க் காவிரிப் பூம் பட்டினத்தில் மாசாத்தர் மகனாகப் பிறப்பாயாக" என ஆயனுக்குக் கூறினாள்.

"என்றவருக்கு விடைகொடுத்து இன்னுமொரு
வார்த்தை சொல்வாள்
மன்றலருஞ் சீரகத்தார் வணிகனிட னீபோந்து
சென்றிருந்து வளர்ந்தளவில் சிறப்புடனா னங்குவந்து
மன்றல் செய்து நானுமுன்னை மதுரைநகர் கொடுவருவேன்."

என்றாள். (மன்றல் - திருமணம்).

கோவலனது நிலை இவ்வாறாக, பாண்டிமாதேவி மங்கையர்க்கரசி நல்லதொரு மாங்கனியை எடுத்து, அதைச் சிறந்ததொரு கண்ணாடியின்மேல் வைத்து, அதன் ஒளியைப் பார்த்தாள். கண்ணாடிப் படத்திலுறு மாங்கனியில் சீர்த்த கடுஞ் சிங்கமெனத் தேவி அவதரித்தாள்.

மாங்கனியின் விம்பத்திலிருந்து குழந்தை தோன்றிய செய்தியைத் தூதுவர் பாண்டியனுக்குச் சொன்னார்கள். பாண்டியன் அப்பொழுதே அங்கிருந்த மறையோரைப் பார்த்து அந்த மகவுடைய பலனே தென்று சொல்லுங்கள் என்றான். அவர்கள் "இக் குழந்தையால், உன் நாட்டுக்கும் உனக்கும் அழிவுண்டாகும். அதனால் குழந்தையைப் பேழையிலடைத்துக் கடலில் விடுக " என்றனர்.

பாண்டியன் பரதவர் தலைவனை அழைத்து, குழந்தையைப் பேழையிலடைத்துக் கடலில் விடுமாறு கூறினான். பரதவர் தலைவன் கடலில் விட்ட அக்குழந்தையை, மாநாய்கர் கண்டெடுத்து, கண்ணகை யெனப் பெயரிட்டு வளர்த்தார். அவளே கோவலனை மணந்து மதுரையை எரித்த தெய்வக் கண்ணகி ஆனாள்.

இவ்வாறு, கண்ணகையின் பிறப்புப் பற்றிக் கூறுங் கதைகளில் வேறுபாடு காணப்படுவது போலவே, இலங்கையில் கண்ணகை கோயில்கள் இருக்கும் இடங்கள் பற்றிக் கூறும் பாடல்களிலும் கண்ணகை இலங்கைக்கு வந்திறங்கிய இடம், தங்கித் தங்கிச் சென்ற பாதை பற்றிக் கூறுஞ் செய்திகளிலும் வேறுபாடு காணப்படுகிறது.

பன்றித்தலைச்சியிற் படிக்கப்பட்ட கோவலன் கதை, கண்ணகை அனலைதீவிலிருந்து அங்கணாமக் கடவை, ஊழெு, உடுவில், மாவிட்டபுரம், அச்செழு,மட்டுவில், நுணாவில், வேலம்பிராய், மண்டுவில், கச்சாய், கரம்பகம், போக்கட்டி, விழுபளை, அம்பாவளை, அறத்தி, திரியாய் வழியாக வற்றாப்பளைக்குச் சென்றதாகக் கூறுகிறது.

"சீருற்ற மதுரை நகர் மாறனுடை அகந்தையால்
செப்புக் குடத்தில் மாங்கனிய தாகி
செழியனுடன் வாதாடி சிலம்பினாற் றீப்பரப்பி
காருற்ற அனலைதீவு தனில் வந்து
மாதவப் பதிதனில் களைப் பனலாறியே
கருதும் அங்கணாமக் கடவைதனில் வந்து
பெண் பனையை ஆண் பனையாக்கி
ஆண்பனையை ஈஞ்சாக்கியே
பேருற்ற திப்படிக் குன்புதுமை
பின்பேசும் அன்னையே
பெருமை ஊரெழு உடுவில் மாவிட்டபுரம்
ஊர்பெருகும் அச்செழுப் பதிதன்னிலும்
ஊருற்ற மட்டுவில் நுணாவில் வேலம்பிராய்
உயர்வேலம் மண்டுவில் கச்சாய்
கரம்பகம் போக்கட்டி விழுபளை
அம்பாவளை அறத்தி திரியாய் ஓங்கு



வற்றாப்பளை தன்னில் வந்து
உப்புத் தண்ணீரை விளங்கெண்ணெயாக்கி
எங்கெங்கு மங்கங்கதாய் நின்றொளிர்கின்ற
கண்ணகைச் செல்வியாரே..."

என்பது கண்ணகை சென்ற இடங்களைக் கூறும் பாடல்.

கண்ணகை கோயிலிருக்கும் இடங்களைக் குறிப்பிடும் மாதனைக் கண்ணகை அம்மையைப் பற்றிய பாடலொன்று வருமாறு:

செந்திரு வளம்பெருகு மதுரையின் மனோன்மணி
சிறந்தகண் மேரு மருவும்
திகழுமாங் கனியின்வந் தேபெரிய நாடுநற்
தேவதுறை தம்பாலையில்
சுந்தர மிகுந்தகன் னார்வயலி னோடுநற்
சுட்டிபுர மிருசுவில்லில்
துவளிபா ணாவெட்டி அங்கணா மக்கடவை
நச்சுற்ற பன்றித் தலைச்சியில்
விந்தைசெறி அத்துளுவில் மந்திகையில் நிற்றூவில்
மிக்கவா ழியவளையிலும்
மேவு திரியாயினும் கல்லிருப் பின்னரிய
மிக்கவற் றாப்பளையிலும் வந்துவந் தேயிருந் தங்கு
நிதமெனது மனதினிற் குடிபுகுந்து
வற்றாத கிருபைதந் தேதுணைசெய் மாதனையில்
மருவுகண் ணகையம்மனே (இப்பாடல் மாதனை தமிழிசைச் சங்கத்தின் சிலம்பொலியிலிருந்து எடுக்கப்பட்டது.)

திரு எம். சற்குணம் தாம் எழுதிய கட்டுரை யொன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: (திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர் 1976 .07 04. பக்கம் 115)

பாண்டியனால் பல துண்டங்களாக வெட்டப்பட்ட கோவலனைக் கண்ணகி சேர்த்தெடுத்துத் தைத்து உயிரளிக்கக் கோவலன் எழுந்திருந்து,

" மாதகியோ கண்ணகியோ வந்தவர்கள் படுகளத்தில்
மாதகியாள் வந்தாலே வாடியென் மடிமேல் " எனக்

கூறினான் . இதனால் மாதவியின் பெயரை முதலில் குறித்துக் கேட்டானே என்று மனமுடைந்து கோபங்கொண்டு, கண்ணகி தன்னை ஐந்தலை நாகமாக மாற்றி, மதுரை மாநகரம் துறந்து தெற்கு நோக்கி ஊர்ந்து சென்று முதலில் நயினாதீவில் தங்கினாள். பின்னர் வட்டுக்கோட்டைப் பாங்கரிலுள்ள சுருட்டுப்பனை வழியாகச் சீரணி அங்கணாமைக்கடவை, அளவெட்டி, சுருவில் முதலான இடங்களிற் றங்கினாள் என்ற ஐதிகம் வழக்காற்றில் இருந்து வந்திருக்கிறது. ஐந்தலை நாகம் ஊர்ந்து சென்ற வழி வழுக்கி-யாற்றுப் பள்ளமாய் மாறிய தென்பர். இவ்விடங்களில் அமைந்த கோயில்களில் எல்லாம் ஐந்தலை நாக சந்நிதானமும் அம்மன் சந்நிதானமும் அமைந்திருக்கின்றன. சீரணியிலுள்ள கோயில் நாகம்மாள் கோயில் எனவும் அளவெட்டி சுருவில் கோயில்கள் நாகதம்பிரான் கோயில் எனவும் வழங்கப்படுகின்றன. நாக தீவில் இருந்து புறப்பட்ட கண்ணகி கோப்பாய், மட்டுவில், வேலம்பிராய், கச்சாய் வழியாகச் சென்று நாகர்கோயிலை அடைந்தனள் என்று வேறுஞ் சிலர் கூறுவர். பின்னர் கரைச்சியில் உள்ள புளியம் பொக்கணையை அடைந்து அப்பால் முல்லைத்தீவில் உள்ள வற்றாப்பளையை அடைந்தனள் என்பர்.

மட்டக்களப்பில் வழங்கும் உடுக்குச் சிந்தில்,

" பட்டிநகர் தம்பிலுவில் காரைநகர், வீரமுனை
பவிசுபெறு கல்முனைகல் லாறுமகி ழூர்எருவில்
செட்டி பாளையம் புதுக்குடியிருப்பு செல்ல
முதலைக் குடா கொக்கட்டிச் சோலை
அட்ட திக்கும் புகழு வந்தாறு மூலை
அன்பான சிற்றாண்டி நகரதனில் உறையும்
வட்டிவப் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை
மனதினில் நினைக்கவினை மாறியோ டிடுமே"

எனக் கூறப்படுகிறது.

இப்பாடல்களையும் செய்திகளையும் ஒப்பு நோக்கும்போது, இவற்றுள் எந்தவொரு பொருத்தப் பாட்டையுங் காணமுடிய-வில்லை. இவை கண்ணகை மதுரையிலிருந்து இங்குவந்து, எந்த இடத்திலிருந்து எவ்வழியாக எங்குச் சென்றாள் என்பதை ஒரு முகமாகக் கூறவில்லை. இப்பாடல்களும் செய்திகளும் கண்ணகை



கோயில்கள் இருக்குஞ் சில இடங்களைக் குறிப்பிடுகின்றன வென்பதே பொருத்தமானதாகும்.

கண்ணகையின் கதையைக் கூறும் பாடல்களும் ஒன்றோ-டொன்று முரண்படுகின்றன. வழக்குரை காவியம் சில ஆச்சரியப் படத்தக்க செய்திகளைக் கூறியபோதிலும் கண்ணகையைத் தெய்வத்தின் அவதாரமாகக் காட்ட முயலவில்லை. சிவனளித்த வரத்தினால் பராசர முனிவரின் மகள் தெய்வமாக வணங்கப்படு-கிறாள். அவளை வணங்குவது சிறுதெய்வ வழிபாட்டின் பாற்படாது. அவளை வணங்குவதற்குச் சிவ சம்மதமும் உண்டு எனக் கூற முயல்கின்றது.

சிவன் பிறப்பிறப்பு இல்லாதவன். அவன் பிறந்தான் இறந்தான் என்பதற்குரிய வரலாறு ஏதாவதிருந்தால் கூறுங்கள் பார்க்கலாம் என்கிறார் திருமூலர். இவ்வினா " கூறுமின் னீர்முன் பிறந்திங் கிறந்தமை? என்றும் திருமந்திரத்தின் மூலம் எழுப்-பப்படுகின்றது. இவ்வினாவுக்கு " சிவனின் வேறாகாத சத்தி பாண்டியனின் மகளாக யோனிவாய்ப்பட்டுப் பிறந்ததை நீர் அறியீரோ? என எதிர் வினாத் தொடுப்பது போல், கண்ணகியின் அவதாரம் பற்றிக் கதை சொல்லுகின்றது சிலம்பு கூறல்.

அம்மன் பள்ளும் கோவலனார் கதையும் கண்ணகையைச் சிவசத்தியின் அவதாரமாகக் காட்டி, கண்ணகை வழிபாட்டைச் சத்தி வழிபாடெனக் கூற முயன்றிருக்கின்றன.

"கண்ணகை அம்மனின் வழிபாட்டைப் பற்றி நோக்கும் போது மேற்படி தெய்வத்தின் அவதாரக் கருத்து ஏன் தோன்றி வளர்ந்தது என்பதை ஓரளவு விளங்கிக் கொள்ளவேண்டிய தவசியமாகின்றது. ஈழத்துத் தமிழர் மத்தியில் நிலவும் இந்து சமயம் சைவ சித்தாந்த நெறிப்பட்டது.

சித்தாந்த சைவம் ஆகம மரபுகளுக்கு முக்கிய இடமளிப்பது. ஆலயக் கிரியைகள் ஆகம மரபுகளை அடிப்படையாகக் கொண்-டவை. கண்ணகி வழிபாடு பண்டு தொட்டு நிலவி வந்த பிரதேசங்-களிலே ஆகம மரபுடன் கூடிய சித்தாந்த சைவம் பரவிய வேளை-யில் கண்ணகியை வழிபட்டு வந்த மக்கள் ஆகம நெறியில் கண்-ணகிக்கு அமைதிகாண வேண்டியவர்களாயினர். இதனால் ஒரு

பகுதியினர் கண்ணகியை உமை அல்லது பத்திர காளியின் அவதாரமாகக் கொண்டனர். இதற்தேற்பச் சிலம்புகூறல் காவியக்கதை அமைந்த தெனலாம்." என வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோயில் என்னுந் தலைப்பில் நா. சுப்பிரமணியம் அவர்கள் எழுதியிருப்பது கண்ணகை கதைகளைப் பொறுத்தவரையில் மிகப் பொருத்தமானதாகும். (திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர், 1976.07.04. பக்கம் 208)

கண்ணகையை அன்னை பராசத்தியின் அவதாரமாகக் காட்டமுயலுங் கண்ணகை கதையெதுவுங் கோவலனை எந்தவொரு தெய்வத்தின் அவதாரமாகவுங் காட்ட முயலவில்லை. கோவலனை மனிதனாகவே காட்டுகின்றன. இதன் மூலம் சிவத்தின் வேறாகாத சக்தி, சிவனைப் பிரிந்து, மனித உருவில் வந்து மனிதன் ஒருவனை மணம் முடித்து அவனோடு வாழ்க்கை நடத்தியதென்று சொல்லாமற் சொல்கின்றன. சிவசத்தியை இவ்வாறு இழித்துரைக்கும் கதைகளில் ஒன்றான கோவலனார் கதை, கண்ணகையைத் தீண்டாத கற்புடைய செழுந்திருவெனக் காட்டவும் முனைகின்றது.

கண்ணகைக்கும் கோவலனுக்குந் திருமணம் நடந்தது. சப்பிரமஞ்சந் தான்மருவு மெத்தையிலே கோவலரும் செய்யிழையும் பள்ளி கொண்டனர். அன்னைதனை அவர் தழுவத் தொடங்கினார். அப்போது கோவலனுக்கும் கண்ணகைக்குமிடையே அக்கினியெழுந்து முகட்டளவும் உயர்ந்து நின்றது. கோவலன் அக்கினி தோன்றியதற்குரிய காரணத்தைக் கண்ணகையிடங் கேட்டான். அதற்குத் கண்ணகை கூறிய பதில் வேடிக்கையானது.

" உரைமருவு மங்கிலியம் உமக்கெனவே தரித்தனாற்
புரைமருவு மனையெனவே பூவுலகிற் பேரானேன்
தரைமருவு முமது மொழி தவறாதுசெயல் புரிவேன்
வரைமருவு புயமுடைய மகிழ்நரேநீர் கேட்டருளும் "

என்ற கண்ணகை

" உந்தன் மயல்தீரப் பூவுலகிற் கணிகையர்கள்
கூட்டமுண்டு பொருள் கொடுத்தோர்
கொடியிடையைப் புணர்ந்திடும் நீர்....."



(மணமாலை) எனக் கண்ணகை கோவலனுக்குக் கூறியதாக, கோவலனார்கதை கட்டி நடத்தப்பட்டிருக்கிறது.

சிலம்பு விற்கச் சென்ற கோவலன் அரசியின் சிலம்பைத் திருடிய கள்வனெனக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கொலை செய்யப்படுகிறான், தீய கனவுகளால் கோவலனுக்குற்ற தீமையை யுணர்ந்த கண்ணகை ஒரு கையில் வேப்பங் கிளையையும் மறு கையிற் சிலம்பையுங் கொண்டு கொலைக்களஞ் சென்று இறந்த கணவனின் உடலைக் கட்டித் தழுவினாள். அவன் உயிர்பெற்றெழுந்து, நடந்த சம்பவத்தைக் கண்ணகிக்குக் கூறக் கண்ணகி பாண்டியனது அரச சபைக்கு சென்று வழக்குரைத்தாளென வழக்குரை காவியங் கூறுகிறது.

மந்திகையிற் படிக்கப்படும் கோவலனார் கதை, கோவலன் உயிர்பெற்றெழுந்த வரலாற்றைச் சிறிய மாற்றத்தோடு வழக்குரை காவியங் கூறுவது போலவே கூறுகிறது.

இக்கதைகளெல்லாம், இறைவியைக் கனவு நனவு முதலிய ஐந்தவத்தைப் படுபவளாகவும் பழிவாங்குங் குணமுடையவளாகவுங் காட்டுகின்றன.

இது மாத்திரமல்ல, கோவலனார் கதையைப் பாடிய ஆசிரியர்

" வரிவிழிகண் ணகைபொருட்டால் வந்தசிலம்பதிகாரம்
விரிதமிழை யானுரைக்க வேறுவினை வாராதே ..." எனவும்

இளங்கோவடிகள்

"தக்கசிலம் பதிகாரந் தானுரைத்தா னிக்கதையை
மிக்கபொருட் டாளிசையால் மிகுத்துரைக்க வெண்ணுமது
திக்கயங்கள் தன்னுடனே சிறுநரிதா னெதிர்ந்த தொக்கும்"

எனவும் (மணமாலை) பல்வேறு விதமாகக் கூறித் தான் பாடிய கதை, சிலப்பதிகாரத்தைத் தழுவியது அல்லது சிலப்பதிகாரக் கதையேயென மக்களை நம்பச் செய்வதற்கும் முயற்சித்திருக்கிறார்.

இதன்றியும்,

" ஆகையினால் யான்சிறிது மறிவிலியே னுரைத்தகதை
பேகனென்னும் பெரியோரே பிழைபொறுக்கை கடனிதற்கு

வாகுபெலத் தாலொருவன் வந்திகழ்ச்சி புரிவானேல்

நாகரத்தாற் சொல்லுகிறேன் நானவ னைச் செய்யும்வகை"

(அரங்கேற்றுகாதை) என்று வீரம் பேசியிருக்கிறார். நாகரம் என்னும் சொல் நா + கரம் எனப் பிரிக்கப்படும். எனவே " ஒருவன் வந்து இகழ்ச்சி புரிவானேல் நான் அவனை நாக்காலும் கரத்தாலும் செய்யும் வகை சொல்லுகிறேன். " என்பது இதன் கருத்து.

இத்தகைய, கண்ணகியைக் கடவுளாக்க முயன்று தவறிய கதைகள்தான் கண்ணகை கதைகள். இக்கதைகள் அன்னை பராசத்தியைஇழிவுபடுத்துங்கதைகள். சிவநெறியைச்சிறுமைப் படுத்துங்கதைகள்.



# கண்ணகை வழிபாட்டில் நாவலர் ஏற்படுத்திய தாக்கங்கள்

எமது நாட்டில் நாவலர் வாழ்ந்த காலம் கிறிஸ்து மதம் ஆதிக்கம் செலுத்திய காலம். சைவப் பாடசாலைகள் இல்லா-திருந்த காலம். அப்போது படித்தவர்களெனக் கருதப்பட்ட மிகச்சில சைவ சமயத்தவர்களும் கிறிஸ்தவ பாடசாலைகளிலே படித்த-வர்கள், அல்லது திண்ணைப் பாடசாலைகளில் தமிழையும் சமயத்தையும் மாத்திரங் கற்றவர்கள். பெரும்பான்மையான மக்கள் எழுத வாசிக்கத் தெரியாதவர்களாய் இருந்தனர். அவர்களை வழிநடத்தவேண்டிய பொறுப்பும் கடமையும் படித்தவர்களைச் சார்ந்திருந்தது. இத்தகைய சூழ்நிலையில் சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய சேவை செய்த நாவலர் பெருமான் இலங்கைநேசன் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில்,

"சைவ குருமார்களும் சைவபண்டிதர்களும் சிவாகமப் பிரமாணங் கொண்டு வாதித்து, உண்மையை நிறுத்தக் கடவர்கள். உண்மையென்று நிறுத்தப்பட்டவைகளைச் சைவ சமயிகள் எல்லாருங் கைக்கொண்டு நடக்கக் கடவர்கள். பொருளாசை கொண்டும் அதிகாரத்துக்குப் பயந்தும் வழக்கம் வழக்கமென்று நழுவியும் சிவாகம விரோதஞ் செய்பவர்கள் சிவபெருமானுடைய சாபத்துக்கு ஆளாவர்கள். அவர்கள் சைவசமயப் பற்றுச் சற்று மற்றுக் கிறிஸ்து சமயப்பற்று முற்றுமுற்று நடப்பதே மிக நலம். அதனாற் பிறருக்குத் தீங்கு விளையாது. வழக்கம் வழக்கம் என்பவர்கள் தங்கள் தங்கள் முன்னோர்களுடைய வடிகாது கொண்டைத் தலை சிலுவைக்குறித்தலைச்சீலை முதலிய வழக்கங்களை நீக்கி விட்டதேனோ? " எனக் குறிப்பிட்டார் *(இலங்கை நேசன் 1ஆம் புத்தகம் இல 13)*

தம்மைச் சைவ சமயிகள் எனக் கூறிக்கொண்டு அச் சமயப் பிரமாணங்களுக்கு விரோதமாக நடப்பவர்களை நாவலர் வன்மையாகக் கண்டித்தார்.

மாதொரு பாகனாம் சிவனைத் தவிர்ந்த மற்றைய தெய்வங்கள் வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் மேல் வினையுஞ் செய்யும் எனச் சிவஞான சித்தியாரிற் கூறப்படுவதைக் கருத்திற் கொண்டு போலும் மனிதர்களைப் போலவே பிறந்தும் இறந்தும் உழலுகின்ற தேவர்களைப் பரம் என்று கொள்வது சைவ சமயத்துக்கு முற்றும் விரோதம் எனவும், சைவ சமயிகள் என்று பெயர் இட்டுக் கொண்டு அநேக மூடர்கள் உயிர்ப்பலி ஏற்கிற துட்ட தேவதை-களையும் காடன், மாடன், சுடலைமாடன், காட்டேறி, மதுரை வீரன், கறுப்பன், பதினெட்டாம் படிக்கறுப்பன், சங்கிலிக் கறுப்பன், பெரியதம்பிரான், முனி, கண்ணகி, பேய்ச்சி, முதலானவர்களையும் வணங்குகிறார்கள் எனவும் கூறினார்.

பிராமணர்களும் சைவசமய குருமாரும் எமது சமயத்தைப் பற்றி அறிந்திருக்க வேண்டியவர்கள், சமய உண்மைகளைக் கூறிச் சைவ சமயிகளை நெறிப்படுத்த வேண்டியவர்கள். அவர்கள் தமது சமயத்தைப்பற்றி அறியாதிருப்பதையும் சமயத்துக்கு விரோதமாக நடப்பதையுங் கண்டு நாவலர் மனமிக வருந்தினார்.

"செட்டிச்சியும் புறச்சமயத்தவளுமாகிய கண்ணகி பரம்-பொருள் எனவும் விநாயகக் கடவுள் சுப்பிரமணியக் கடவுள் இருவரும் அவளிற் றாழ்ந்தவர் எனவும் மயங்கி, அவளுக்குக் கோயில் கட்டுவித்து அவ்விருவர் விக்கிரகத்துக்கும் நடுவே அவள் விக்கிரகந் தாபித்து வழிபடும் அதிபாதகர்களும் அவளுக்குப் பிரதிட்டை பூசை திருவிழாக்கள் செய்து அவளெச்சில் புசிக்கும் அதிபாதக சிரோமணிகளாகிய பிராமணர்கள் சைவ குருமார்களும் அவர்களை நமஸ்கரித்துங் கும்பிட்டும்அவர்களுக்குத் தக்ஷிணை கொடுத்து அவர்களைக் கொண்டு தீக்ஷை அந்தியேட்டி, சிராத்தங் கலியாணச் சடங்கு விரதோத்தியாபனம் முதலியவற்றையுஞ் சிவாலய விக்கினேசுராலய சுப்பிரமணியாலயப் பிரதிட்டை பூசை திருவிழாக்களையுஞ் செய்விக்கும் நீங்களுமா சைவ சமய நிந்தகர்கள்? உங்களுக்கிரங்கி இவையெல்லாம் பாவம் பாவமென்று போதிக்கும் நாமும் நம்போல்வார்களுமா சைவ சமய நிந்தகர்கள்? விசாரியுங்கள். பொருளாசையினால் உங்கள் சொல்வழியே நடக்கும் உங்கள் பிராமணரும் குருமாரும் தங்களுள் இருவர் நடுவே தங்களிற்றாழ்ந்த சாதியாளும் அன்னிய சமயத்தாளுமாயுள்ளவள் ஒருத்தியை இருத்தி நீங்கள் நமஸ்கரிக்கப் புகின் அதற்கு உடன்படுவார்களோ? சற்றே பரீட்சை செய்து பார்த்து விடுங்கள்." என எழுதினார். (நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இரண்டாவது பத்திரிகை)

நாவலர் இவ்வாறான கருத்துக்களை எடுத்துரைத்த போதிலும் இந்தியாவில் கண்ணகி வழிபாடு மறைந்தது போல இலங்கையிற் கண்ணகி வழிபாடு முற்றாக மறைந்து விடவில்லை. இப்போதும் இங்கு கண்ணகி வழிபாடு வழக்கிலிருக்கிறது. மட்டக்களப்புப் பகுதியில் அதிகமான கண்ணகை கோயில்களில் நடைபெறும் வழிபாடு தனித்துவமானது. அங்கு வைகாசி வளர்மதி நாட்களில் மட்டுமே பூசை செய்யப்படுகிறது. இவ்விழாக்கள் சடங்கு என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. சிங்கள மக்கள் பத்தினித் தெய்வ வழிபாட்டில் மாற்றங்களைப் புகுத்த முனைந்து இடர்ப்படுவதாகத் தெரியவில்லை.

இன்று யாழ்ப்பாணத்திலுள்ள கண்ணகை கோயில்களில் சிவாலயங்களில் நடைபெறுவது போலவே பூசை நடைபெறுகிறது. பல கண்ணகை கோயில்கள் இராசராசேஸ்வரி, மனோன்மணி ஆலயங்களாகவும் வேறு அம்மன் ஆலயங்களாகவும் மாற்றப்-பட்டுவிட்டன. இதற்கு, கீழே தரப்படும் கூற்றுக்களே சான்றாகும்.

" ஈழத்திற் கண்ணகி வழிபாடு அழியாத ஒரு வழிபாடாக நிலைத்து விட்டாலும் இவ்வழிபாட்டை ஆறுமுக நாவலரும் அவரது சகாக்களும் ஆதரிக்கவில்லை, எனவே கண்ணகி கோயில்கள் நாகேஸ்வரி, நாகபூஷணி, ராஜராசேஸ்வரி அம்மன் கோயில்களாக மாற்றப்பட்டதாக அறிய முடிகிறது." என, ஈழத்தில் கண்ணகி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் கட்டுரையில் திரு.எம்.சற்குணம் எழுதியுள்ளார் (திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர் 4.7.1976. பக்கம் 115).

" கயவாகு என்ற சிங்கள மன்னன் இலங்கையில் பத்தினி வழிபாட்டைத் துவக்கி வைத்தான். இலங்கை மக்களும் ஆடி மாதந்தோறும் பத்தினி விழா எடுத்து வந்தனர். இன்றும் அவ்விழா

நடைபெற்று வருகின்றது. அவ்விழாவில் பத்தினிக்கல் ஒன்றைத் திருவீதி உலா எடுப்பித்தல் வழக்கமாகவும் உள்ளது. அவ்விழாவுக்கு அந்நாட்டில் 'பெரிஹரா' என்று பெயர் வழங்குகின்றது. பெரிஹரா என்றால் பிராகாரம் (சுற்றிவருதல்) என்று பொருள். இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் பல இடங்களில் கண்ணகி கோயில்கள் எழுப்பப்பட்டிருந்தன. இன்றும் சில இடங்களில் கண்ணகி வழிபாடு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் சமணப் பெண் தெய்வமான கண்ணகியைத் தமிழர் வணங்கலாகாதெனத் தடுத்துப் பல கண்ணகி கோயில்களை இராசஇராசேசுவரி கோயில்களாக மாற்றியமைப்பித்தார் எனக் கூறுவர்" எனச் சென்னைப் பல்கலைக்கழக மரபுவழிப் பண்பாட்டு நிலைய இயக்குநர் டாக்டர் கே.கே. பிள்ளை கூறுகிறார். (தமிழக வரலாறு, மக்களும் பண்பாடும், பக்கம் 112. வெளியீடு தமிழ் நாட்டுப் பாடநூல். வரிசை எண் 350)

"ஈழநாட்டிற்குக் கண்ணகி வழிபாடு வந்த காலத்திலேயே யாழ்ப்பாணத்திலும் கண்ணகிக்கான பல கோயில்கள் அமைக்கப்பட்டன என்று தெரியவருகிறது. ஆனால் சைவம் கொழிக்கும் அத்திருநாட்டிலே கண்ணகி சைனத் தொடர்புடையவள் என்று கருதப் பெற்றதனாற் போலும் சைவம் பரப்புவோர் சிலரின் முயற்சியால் கண்ணகி கோயில்கள் பல இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில்களாக மாற்றப்பட்டுவிட்டன" எனத் திரு. வி.சி.கந்தையா கூறுகிறார். (மட்டக்களப்புத் தமிழகம். பக்கம் 159).

நாவலரின் பிரசாரங் காரணமாகக் கண்ணகை கோயில்கள் மாத்திரமன்றி, அண்ணமார் நாச்சிமார் முதலிய சிறுதெய்வங்களின் கோயில்கள் பலவும் சைவச் சார்புடைய கோயில்களாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாவலர் காலத்துக்குப் பின் சைவாலயம் அமைக்கக் கருதிய எவரும் கண்ணகையைச் சைவ சமயத் தெய்வமெனக் கருதவுமில்லை. கண்ணகைக்கு ஆலயம் அமைக்கவுமில்லை.

சில கண்ணகை அம்மை கோயில் நிருவாகிகள் தமது ஆலயங்களை இராசராசேஸ்வரி ஆலயமாகவோ அல்லது வேறு அம்பாள் ஆலயமாகவோ மாற்ற விரும்பிச் சில மாற்றங்களைச்



செய்கின்ற போதிலும், அதை வெளிப்படையாகக் கூறினால், கண்ணகை கோயிலுக்கெனத் தருமசாதனஞ் செய்யப்பட்ட சொத்துக்களையும் அறக்கட்டளைகளையும் இழக்கவேண்டி வருமோ என்னும் அச்சங்காரணமாக செய்வதின்னதெனத் தெரியாது திகைக்கின்றனர்.

இவ்விடத்தில் இன்னொரு விடயத்தைக் குறிப்பிடுவது தவிர்க்க முடியாததாகும். கண்ணகைக்குப் பூசை செய்யுங் குருமார் அன்னை பராசத்திக்குப் பூசைசெய்யும் விதிமுறைப்படியே பூசை செய்கிறார்கள். கண்ணகைக்கு நாமார்ச்சனை செய்யும்போது பராசத்தியின் திருநாமங்களோடு கண்ணகை என்னும் பெயரையும் சேர்த்துக் கூறுகிறார்கள். அதே குருமார் சிவசத்திகளுக்கு நாமார்ச்சனை செய்யும்போது கண்ணகை என்னும் பெயரை உச்சரிப்பதேயில்லை. இதொன்றே கண்ணகை என்பது பராசத்தியின் திருநாமங்களில் ஒன்றல்ல என்பதையும் பூசகர்கள் கபடத்தனமாகக் கண்ணகையைப் பராசத்தியாகப் பாவிக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

## மாறிவரும் நிகழ்வுகள்

பன்றித்தலைச்சியில் கண்ணகி வழிபாடு எப்போது ஆரம்பமானது என்பதைத் திட்டவட்டமாகக் கூறுவதற்குரிய ஆதாரம் எதுவுமில்லை. கர்ணபரம்பரைக் கதைகளையும் கண்ணகி வழிபாட்டோடு தொடர்புடைய பாடல்களையும் பார்க்கும் போது, இலங்கையில் கண்ணகி வழிபாடு எப்போது ஆரம்பமானதோ அப்போதே இங்கும் கண்ணகி வழிபாடு ஆரம்பமாயிருக்கலாம் எனக் கருதலாம்.

ஆதியில் கண்ணகை அம்மை ஆலயம் அது இப்போதிருக்கும் இடத்துக்கு வடமேற்கே பிரதான வீதியோரத்தில் ஒரு சிறிய குடில் வடிவில் அமைந்திருந்ததென்பது கர்ணபரம்பரைக் கதை. திங்கட்கிழமைகளில் அம்மையைக் கும்பத்தில் எழுந்தருளச் செய்து பூசாரிகள் பூசை செய்து வந்தனர். பூசைக்கு வடமொழி மந்திரங்கள் உபயோகிக்கப்படவில்லை. ஏதோ ஒரு ஒழுங்கு முறையைப் பின்பற்றிப் பூசை செய்து வந்தனர்.

" காரைதீவு, தம்பிலுவில், மண்டூர், வந்தாறுமூலை என்னும் ஊர்களிலே பல வசந்தன் ஏடுகள் பெட்டகங்களிற் கிடந்து துயில் செய்கின்றன. அவ்வாறான ஏடுகள் சிலவற்றில் கண்ணகியம்மன் பத்ததி என்ற அம்மன் பூசை விதிகளும் காணப்படுவ. பூசை விதிகள் தமிழ் மந்திரங்களாலானவை மறைத்து ஓதப்படுபவை. அதனாற் போலும் பொதுமக்களின் கைக்கு இவ்வேடுகளைச் சேர்க்கச் சிலர் மறுக்கிறார்கள் என்றும் தெரிகிறது." எனக் கூறுகிறார் திரு. வி.சி.கந்தையா. (மட்டக்களப்புத் தமிழகம் பக்கம் 201). அவர் கூறும் அதே காரணங்களாற் போலும் பன்றித்தலைச்சியிற் படிக்கப்பட்டு வந்த கோவலனார் கதையும் மறைந்து விட்டது. அது மறைந்தது போலவே இங்கிருந்த கண்ணகை அம்மை பத்ததியும் மறைந்துவிட்டது அல்லது மறைக்கப்பட்டு விட்டதென முன்னோர் சிலர் கூறினார்கள்.



சிறிது காலஞ் செல்லக் குடிலிருந்த இடத்துக்குத் தெற்கே செங்கற்களாலான சிறியதொரு மடாலயம் அமைக்கப்பட்டது. இவ்வாலயத்தின் சிதைவுகளை இன்றுங் காணமுடியும்.

இவ்வாலயம் இருந்த காலத்திலோ அதற்கு முன்போ ஒருநாள் மாட்டுத்தலையைப் பன்றித்தலையாக்கிய அதிசயம் நிகழ்ந்தது. அது காரணமாக அம்மையை எழுந்தருளச் செய்யுங் கும்பத்துக்குப் பொன்னாலான பன்றி முகஞ் சார்த்திப் பூசை செய்யும் வழக்கம் உண்டானது. பங்குனித் திங்கட் கிழமைகளில் விசேட பொங்கல் பூசைகள் நடைபெற்றன.

நாகர் கதிர்காமர் என்பவர் 1750ல், இப்போதிருக்கும் இடத்தில் அம்மைக்கு வெண்கற்களாலான மடாலயம் ஒன்றைக் கட்டினார். அப்போது ஆலயத்தில் விக்கிரகம் எதுவும் பிரதிட்டை செய்யப்படவில்லை. பீடமொன்று அமைக்கப்பட்டிருந்தது. பூசாரி தினந்தோறும் பதினைந்து குடம் நீர்கொண்டு பீடத்துக்குப் புனித நீராட்டியபின் அதனருகே தொங்கிக் கொண்டிருக்கும் தூண்டாமணி விளக்கை யேற்றுவார்.

இப்போதிருக்கும் ஆலயத்தின் தெற்கு வீதிக்குத் தென்புறத்தில் ஆலயக் களஞ்சியம் அமைந்திருந்தது. திங்கட் கிழமைகளிலும் பண்டிகை நாட்களிலும் மாலை வேளையில் பூசைக்குத் தேவையான பண்டங்கள், பட்டுக்குடை நிழற்ற, சங்கு சேமக்கலம் முதலிய வாத்தியங்கள் ஒலிக்கக் களஞ்சியத்திலிருந்து ஆலயத்துக்கு எடுத்து வரப்படும்.

கல்வயற் கிராமத்தைச் சேர்ந்த சைவாசார சீலர்கள் நைவேத்தியப் பண்டங்களை ஆக்குவதற்கும் பூசைக்கும் உதவிபுரிந்தனர்.

மூன்று கொத்துப் பச்சையரிசி கொண்டு ஆக்கப்பட்ட அமுதையும் பசுநெய் சேர்த்துச் சமைக்கப்பட்ட கறியையும் பூசாரி மூன்று பெரும் வட்டில்களிற் படைத்து, பீடத்துக்கு நீராட்டி, அதன் மீது கும்பம் வைத்து அதற்குப் பதினைந்து பசும்பொன் கொண்டு செய்யப்பட்ட பன்றிமுகத்தைச் சார்த்தியபின் இரண்டு வட்டில்

அமுது கண்ணகை அம்மைக்கு நிவேதிக்கப்படும். மூன்றாவது வட்டிலில் படைக்கப்பட்ட அமுது வயிரவசுவாமிக்கு நிவேதிக்கப்படும்.

பூசை முடிந்தபின் பூசாரி அம்மைக்கு நிவேதிக்கப்பட்ட அமுதைத் தன் வீட்டுக்கு எடுத்துச் செல்வதுமில்லை, அங்கு வந்திருக்கும் அடியார்களுக்குப் பகிர்ந்தளிப்பது மில்லை. அவ்வன்னம் முழுவதும் கோயில் மாடுகளுக்கு உணவாகக் கொடுக்கப்படும். அதையுண்டு கோயில் மாடுகள் கொழுத்து வளரும். இக்காரணத்தாற் போலும், மட்டுவிலில் கொழுத்தவரைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசும் போது இவர் கோயில் மாடுபோலக் கொழுத்திருக்கிறார் எனக் கூறும் வழக்கம் இருந்தது.

யாராவது அப்பிரசாதத்தை விரும்பிக் கேட்டால் அவருக்கு அதிற் சிறிதளவு வழங்கப்படும். அவ்வன்னம் அதை உண்பவருக்குத் தீராநோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்பட்டது. அதனாற் போலும் நோயுற்றோர் மாத்திரமே அம்மையின் நைவேத்தியப் பிரசாதத்தைக் கேட்டுப் பெற்றனர்.

பீடமிருந்த மண்டபத்தைத் தொடர்ந்து கட்டப்பட்டிருந்த மண்டபம் அடியவர்கள் நின்று அம்மையை வழிபடுமிடமாகவும் அவர்கள் தாமே யாக்கிய தித்திக்குந் தின்பண்டங்களைப் படைக்கும் இடமாகவும் பயன்பட்டது.

சில காலஞ்செல்லப் பசும்பொன்னாற் செய்யப்பட்ட பன்றிமுகம் மாயமாக மறைந்து விட்டது. அதன்பின் வெள்ளியினாற் செய்யப்பட்ட முகஞ் சார்த்திப் பூசை செய்யப்பட்டு வந்தது.

சிலகாலஞ் செல்ல திங்கட் கிழமைகளில் இரண்டு நேரப் பூசை நடைபெறத் தொடங்கியது. மற்றைய நாட்களில் வழமை போல விளக்கேற்றப்பட்டது. 1939 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு நேர நித்திய பூசை நடைபெறத் தொடங்கியது.

1946 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் செம்பினாற் செய்யப்பட்ட கண்ணகை அம்மை விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டது. அன்றிலிருந்து முகஞ்சார்த்திப் பூசை செய்யும் வழக்கம் ஒழிந்தது.



1950 ல் நான்கு நேர நித்திய பூசை நடைபெறத் தொடங்கியது. 1952ல் ஆறுகாலப் பூசை செய்யும் வழக்கம் உண்டானது.

ஆதியில் பங்குனித் திங்கட் கிழமைகளில் பொங்கல் விழா மாத்திரம் நடைபெற்றது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திற்றான் அம்மை திருவுலா வரும் வழக்கம் உண்டானது. சூரியன் மறைவதற்குமுன் நிறைவு பெற்ற திருவுலா, காலப்போக்கில் ஆடம்பரமான அலங்காரத் திருவிழாவாக இரவு முழுவதும் நடைபெற்றது.

மட்டுவிற் கிராமத்தில் வாழ்ந்த பல்வேறு தொழில்களைச் செய்யும் மக்களும் பங்குபற்றும் வகையில் திருவுலாக்களை நடத்தும் பொறுப்புகள் அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. முதலாந் திருவிழாவைப் பறையடிப்போரும் இரண்டாம் திருவிழாவைச் சலவைத் தொழிலாளரும் மூன்றாந் திருவிழாவைத் தச்சுத் தொழிலாளரும் நான்காம் திருவிழாவைச் செட்டிகளும் பங்குனியில் ஐந்து திங்கட் கிழமைகள் வந்தால் அந்தத் திருவிழாவை அல்லது வருடப்பிறப்புத் திருவிழாவை கோவியத் தொழில் புரிவோரும் ஐந்து திங்கள் வருங்காலங்களில் புதுவருடத் திருவிழாவை வேளாளருஞ் செய்தனர்.

1948 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு பங்குனித் திருவிழாவின் போது, இரு பகுதியினருக் கிடையே நிகழ்ந்த மோதலைத் தொடர்ந்து, மீண்டும் கதிரவன் மறைவதற்கு முன்பே திருவிழாவைச் செய்து முடிக்கும் வழக்கம் ஏற்பட்டது. தொழில் சார்ந்த அடிப்படையில் திருவிழாக்களைச் செய்து வந்த வழக்கமும் அற்றுப்போனது.

முன்பு, பங்குனித் திங்கட் கிழமைகளில் பறை அடிக்கும் பத்தர்கள் ஆலய வாசலில் நின்று உடுக்கடித்துக் கோவலனார் கதையைப் படித்து வந்தார்கள். அது இப்போது படிக்கப்படுவதில்லை.

சித்திரைப் புத்தாண்டுத் தினத்திலும் பங்குனித் திங்களில் நடைபெறுவது போலவே திருவுலா நடைபெற்று வருகிறது. புத்தாண்டு தினத்தையடுத்து ஆலய வாசலில் போரடிக்கப்பட்டது. பலர் சாக்குகளில் போர்த் தேங்காய்களைக் கொண்டு வந்து

போரடித்தார்கள். போரடிக்கும் போது உடையுந் தேங்காய்களைக் கொப்பறா வாக்கி அதிலிருந்து எடுக்கப்படும் தேங்காய் நெய்யை ஆலயத் தேவைக்குப் பயன்படுத்தினர். இப்போது போரடிக்கும் வழக்கமும் ஒழிந்துவிட்டது.

சித்திரா பூரணையிலன்று சித்திரபுத்திரனார் கதை படிக்கப்பட்டு வருகிறது. அன்றைய தினம் கஞ்சி நீர்ச்சோறு முதலியவை படைக்கப்படுவதுடன் அடியார்களுக்கும் வழங்கப்படும்.

ஆலயத்திற் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட கொண்டாட்டங்களில் ஒன்று விசாகப் பொங்கல். வைகாசி மாத விசாகத்தை அடுத்துவரும் திங்கட்கிழமை பின்னிரவில், மறுநாட் பொழுது புலர்வதற்கு முன் வற்றாப்பளைக் கண்ணகை அம்மை ஆலயத்தில் பொங்கல் நடைபெறும் அதே தினத்தில் விசாகப் பொங்கல் நடைபெற்றது. இவ்வூர் மக்கள் மாத்திரமன்றிப் பிறவூர் மக்களும் இப் பொங்கல் விழாவிற் பங்கு பற்றினர்.

வழுந்து எனப்படும் மூன்று பெரிய பானைகளை அடுப்பிலேற்றுவதுடன் பொங்கல் ஆரம்பமாகும். அதைத் தொடர்ந்து அடியார்களும் பொங்கல் செய்வர்.

அன்று ஆலய மண்டபம் முழுவதும் பூம்பந்தல் இடப்படும். பந்தலின் கீழ் வெள்ளை விரித்து முக்கனியும் வெற்றிலை பாக்கும் அதன்மீது பரப்பப்படும். வெள்ளை விரிப்பின் இருமருங்கிலும் வெட்டிய இளநீரும் குத்து விளக்குகளும் முழத்துக் கொன்றாக வைக்கப்படும். பூசை ஆரம்பமாவதற்கு முன் குத்து விளக்குகளில் தீபம் ஏற்றப்படும். அத்தீப ஒளி காண்போருடைய கண்ணையுங் கருத்தையுங் கவரும்.

அம்மைக்குத் தீபாராதனை நடைபெறும் போது இளநீர் மீது வைக்கப்பட்ட கர்ப்பூரம் கொழுத்தப்படும் அப்போது எழும் கர்ப்பூர வாசனையும் தீபாராதனையைக் காணும் அடியார்கள் எழுப்பும் 'அரகர' என்னும் ஒலியும் காண்போருக்கு ஒருவித தெய்வீக உணர்வை உண்டாக்கும். அதன்பின் இடம்பெறும் வழிவெட்டுதல் என்னும் நிகழ்ச்சியோடு பொங்கல் நிறைவுறும்.



விசாகப் பொங்கலின் எட்டாவது நாளும் இதுபோன்றதொரு சிறிய விழா நடைபெறும். இதை எட்டாம் மடையென அழைப்பர்.

விசாகப் பொங்கற்றினமான திங்கட்கிழமை பகல் ஆலய முன்றிலில் வசந்தன் அடிக்கப்பட்டது. அப்போது வசந்தன் பாடல்கள் பாடப்பட்டன. இந்நிகழ்ச்சியை நீர்வேலி மக்கள் சிறப்புற நடத்திவந்தனர். இப்போது ஆலயத்தில் வசந்தன் அடிக்கப்படுவதில்லை. அவர்கள் பாடிய வசந்தன் பாடல்களைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் மட்டக்களப்புப் பகுதியிற் பாடப்படும் வசந்தன் பாடல்களுக்கும் இங்கு பாடப்பட்ட பாடல்களுக்கும் ஏதாவது தொடர்புண்டா என்பதையும் அறிய முடியவில்லை.

இப்போது வைகாசி விசாகத்திலன்று சங்கு நீராட்டும் அன்று மாலையில் விசாகப் பொங்கலும் நடைபெறுகின்றன. இப்பொங்கலில் முன்புபோல் பெருந்தொகையான மக்கள் பங்குபற்றுவதைக் காணோம் .

புரட்டாதி மாதத்தில் நவராத்திரி தினங்களில் ஆலயத்தில் விசேட பூசை நடைபெற்றது. விஜயதசமியன்று மானம்பு விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. பன்றித்தலைச்சி தன் ஆலயத்துக்குக் கிழக்கே ஏறக்குறைய ஒரு கிலோ மீற்றர் தூரத்திலிருக்கும் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு எழுந்தருளிச் செல்வார். அங்கு வாழை வெட்டு நடைபெறும். அதன்பின் விநாயகர் ஆலயத்துக்கு முன் மேற்கு நோக்கி அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலில் அம்மை எழுந்தருளியிருப்பார். கண்ணகையம்மைக்கும் மருதடி விநாயகருக்கும் விசேட பூசை நடைபெறும். அதன்பின் மேளக்கச்சேரி முதலிய சிறப்பு நிகழ்ச்சிகள் நிகழும். இந்நிகழ்ச்சிகளுக்கான ஒழுங்குகளைப் பொற்றொழிலாளர் செய்து வந்தனர்.

இந்நிகழ்ச்சிகள் முடிந்தபின் திருவுலாவுக்காக அலங்கரிக்கப்பட்ட, முன்பு மருதடி விநாயகர் ஆலயத்துக்குச் சென்ற வீதி வழியாக, அம்மை தனது ஆலயத்துக்கு எழுந்தருளுவார்.

அப்போது வீதியின் இரு மருங்கிலுமுள்ள வீட்டு வாயில்கள் தோறும் பூரணகும்பங்களும் அவல் கடலை மோதகம் கற்கண்டு

பழம் பாக்கு வெற்றிலை முதலிய நைவேத்தியப் பொருள்களும் வைக்கப்பட்டிருக்கும். நிவேதனம் முடிந்த பின் அப்பண்டங்கள் திருவுலாவிற் பங்குபற்றுவோருக்குப் பகிர்ந்தளிக்கப்படும். மானம்பு விழா இப்போது இவ்விதமாக நடைபெறுவதில்லை.

நவராத்திரி காலத்தில் ஸ்ரீ சக்கர பூசை நடைபெறுகிறது. நவமியிலன்று மகிடாசுர சங்காரமும் விஜய தசமியிலன்று வாழை வெட்டும் நடைபெறுகின்றன.

முற்காலத்தில் நவராத்திரி காலத்தில் ஆலயத்தில் அருணாசல புராணப் படிப்பு நிகழ்ந்தது. இப்போது இவ்வாலயத்தில் புராணப் படிப்பெதுவும் நடை பெறுவதில்லை.

கார்த்திகைத் திங்கட் கிழமைகளில் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனையும் மாலைவேளையில் திருவுலாவும் நடைபெறும்.

கார்த்திகை விளக்கீட்டிலன்று விசேட பூசையும் சொர்க்கப்பனை கொளுத்துதலும் நடைபெறுகின்றன.

ஆரம்பத்தில் திருவெம்பாவை காலத்தில் திருவெம்பாவைப் பூசை மாத்திரம் நடைபெற்றது. திருவாதிரைத் தினத்தில் திருவூஞ்சல் நடைபெறும்.

அம்மையை ஊஞ்சல் ஆட்டும்போது இராமநாத சமஸ்தான வித்துவான் சாவகச்சேரி ச.பொன்னம்பலபிள்ளை அவர்கள் பாடிய ஊஞ்சற் பாடல்கள் படிக்கப்பட்டன.

" பலத்துயருந் தென்மதுரை யாண்டு வந்த
பாண்டியர்கோன் பாலினவ தரித்த பெண்ணீ
தலத்துயரு மாநாய்கன் வளர்த்த கண்ணீ
தனத்துயர்ந்த மாசாத்தான் மருகமின்னீ
குலத்துயரு மொருமகனென் றுலகமேத்துங்
கோவலனா ரினிதறஞ்செய் மனைக்குப் பொன்னீ
நலத்துயரு மினையபன்றித் தலைச்சித் தாய் நீ
நாட்டமுடன் வீற்றிருந்தே யாடாயூஞ்சல் "

(பாடல் 6)

என்னும் ஊஞ்சற்பா கண்ணகையின் வரலாற்றையும்



" சொற்பதியிற் பசுத்தலையைப் புலைஞர்க்காகத்
தொடர்பன்றித் தலையாகத் தோற்றச் செய்தாய்..."

(பாடல் 10)

என அம்மைக்குப் பன்றித்தலைச்சி எனப் பெயர் வழங்குவதற்குரிய காரணத்தையும்

" தங்குநன்றிப் பத்தினியே யாடீரூஞ்சல்
தையலர்க்குட் டேவதையே யாடீரூஞ்சல்
துங்க மன்றிற் பொன்னணங்கே யாடீரூஞ்சல்
தூயகற்பாற் சுடுநெருப்பே யாடீ ரூஞ்சல்

(பாடல் 11)

என கண்ணகை பத்தினித் தெய்வமே என்பதையும்,

" மாநிலமேற் கற்பினுக்கோர் மடந்தா யெச்சரீக்கை
வந்தாறு மூலைமட்டும் நடந்தா யெச்சரீக்கை."

என, கண்ணகை வழிபாடு இங்கிருந்து வந்தாறுமூலை வரை பரவியிருப்பதையும் இப்பாடல்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. இன்று இவ்வூஞ்சற் பாடல்கள் இவ்வாலயத்திற் படிக்கப்படுவதில்லை.

1946 ஆம் ஆண்டிலிருந்து திருவெம்பாவைக் காலத்தில் மகோற்சவம் நடைபெறுகிறது. முன்பு திருவெம்பாவைக் காலத்தில் திருவாத பூரடிகள் புராணம் படித்துப் பயன் சொல்லப்பட்டு வந்தது. இப்போது அப்புராணத்தைப் பற்றிய எண்ணமே அற்றுப் போனது. ஆலயத்திற் படிக்கப்பட்டு வந்த ஊஞ்சற்பா எடுத்தெறியப்பட்டுவிட்டது.

இப்போது படிக்கப்படும் ஊஞ்சற் பாக்கள் எல்லாம்... "பன்றித்தலைச்சி வாழும் இராஜரா ஜேஸ்வரியே யாடீ ரூஞ்சல்" என முடிவு பெறுகின்றன. இதைக் கேட்போருக்கு இங்கெழுந்தருளியிருக்குந் தெய்வம் கண்ணகை அம்மையா இராசராசேஸ்வரியா என்னும் ஐயம் எழுவது தவிர்க்க முடியாதது.

இவ்வையத்தை நீக்கக் கருதிப் போலும் 1979.04.09ல் "யாழ் மட்டுவில் ஸ்ரீ பன்றித்தலைச்சி அம்மை என்னும் ஸ்ரீ இராசராஜேஸ்வரி தோத்திர மாலை " என்னும் ஒரு சிறு நூல்

பன்றித்தலைச்சி அம்மை ஆலயத்தில், மட்டுவில் சைவமாமன்றம் என்னும் திடீர் அமைப்பொன்றின் பெயரால் வெளியிடப்பட்டது. அவ்வளவில் அவ்வமைப்பு மறைந்துவிட்டது. இத் தோத்திர-மாலையிலுள்ள பன்னிரண்டு பாடல்களும் மட்டுவிற் பன்றித் தலைச்சியெனும் இராஜ ராஜேஸ்வரியே என்னும் இறுதி கொண்டு முடிகின்றன.

"மன்றிற் சிவன்றந்த மாகளிறே ஐங்கரனே
பன்றித் தலைச்சிப் பகவதியாய் - நின்றருளும்
எங்கண் ணகியாம் இராசரா சேஸ்வரிதாள்
தங்குகவி பாடவரந் தா " என்பது இந்நூலின் காப்பு.

இக்காப்பு மேலே காட்டப்பட்ட முரண்பாடுகளை நீக்கி, கண்ணகியும் இராசராசேஸ்வரியும் ஒன்றே எனச் சமாதானங் கூற முனைகின்றது. " கண்ணகியாம் இராசராசேஸ்வரி என்பது சரியானால் முன்பிருந்த ஊஞ்சற்பாட்டை நீக்கிவிட்டு புதிய ஊஞ்சற் பாட்டை அறிமுகஞ் செய்ததேனோ?

தைப்பொங்கற் றினத்தில் ஆலயத்தில் விசேட பூசை நடைபெறுகிறது. மட்டுவிலிலும் அயற் கிராமங்களிலும் வாழும் மக்கள் இத்தினத்தில் அம்மையின் ஆலயத்திலும் பொங்கல் செய்வது வழக்கம்.

அப்போதைய தேவை கருதி, *1926* ஆம் ஆண்டு, திரு. நா.செல்லப்பா கேட்டுக் கொண்டபடி. பண்டிதர் சி.கணபதிப்-பிள்ளை பாடிய கண்ணகி அம்மை தோத்திரமும் பிராமணர் ஒருவராற் பாடப்பட்ட கண்ணகி தோத்திரப் பாடல்களும் ஆலயத்திற் படிக்கப்பட்டு வந்தன. எவரும் பாதுகாத்து வைக்காத காரணத்தால் ஐயர் அவர்கள் பாடிய பாடல்கள் அழிந்து விட்டன. இலக்கிய கலாநிதி. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பாடிய கண்ணகியம்மை தோத்திரமும் இப்போது இவ்வாலயத்திற் படிக்கப்படுவதில்லை.

இனி ஆலய அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை நோக்கு-வோம். முன்பு செங்கல்லினாற் கட்டப்பட்டிருந்த அம்மையின் ஆலயத்திற்குத் தெற்கே பாலசுப்பிரமணியர் ஆலயம் ஒன்றும் அதற்குத் தெற்கே ஆலடி விநாயகர் ஆலயமும் இருந்தன.



இவ்வாலயங்களுக்குத் தனித்தனியான நந்தி பலிபீடங்களும் இருந்தன. விநாயகருக்கும் பாலசுப்பிரமணியருக்கும் மட்டுவிலில் வாழ்ந்த பிராமணர் பூசை செய்து வந்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் வேலாயுதர் கதிர்காமர் என்பவர் இவ்வாலயங்களின் நிருவாகத்தைப் பொறுப்பேற்றார். இவர் ஆலடி விநாயகருக்கும் சுப்பிரமணிய-ருக்கும் பூசை செய்து வந்த பிராமணக் குருக்களைக் கண்ணகை அம்மைக்கும் பூசை செய்யும்படி வற்புறுத்தினார். அதற்கிணங்க அப்போது பூசகராயிருந்த அப்பாச்சாமிக் குருக்கள் மறுத்து-விட்டார். அதனால் ஆலய நிருவாகி அப்பாச்சாமிக்குருக்களை நீக்கிவிட்டு ஆவரங்காலைச் சேர்ந்த பிராமணர் ஒருவரைப் பூசகராக நியமித்தார். இச்செயல் விநாயகர் ஆலயத்தையும் சுப்பிரமணியர் ஆலயத்தையும் அழித்தொழிப்பதற்கும் ஆலடி விநாயகரையும் பாலசுப்பிரமணியரையும் கண்ணகையின் பரிவாரத் தெய்வங்களாக்குவதற்கும் எடுக்கப்பட்ட முன்முயற்சி-யாக அமைந்தது.

காலப்போக்கில் விநாயகர் சுப்பிரமணியர் ஆலயங்களி-லிருந்த நந்தி பலிபீடங்கள் அகற்றப்பட்டன. விநாயகரும் பாலசுப்பிரமணியரும் கண்ணகையின் பரிவாரத் தெய்வங்களாக்-கப்பட்டனர். பாலசுப்பிரமணியர் ஆலயம் வேற்பெருமானுக்குரிய கோயிலாக மாற்றப்பட்டது.

இவருடைய காலத்திற்றான் பங்குனித் திங்கட் கிழமைகளில் கண்ணகை அம்மை திருவுலாவரும் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

*1939* ஆம் ஆண்டு இப்போது அடியார்கள் அம்மைக்குப் படையல் செய்யும் வெளி மண்டபம் கட்டப்பட்டது. 1942ல் அர்த்த மண்டபம் மகா மண்டபம் தம்பமண்டபம் தரிசன மண்டபம் முதலியன ஆகம விதிப்படி மாற்றியமைக்கப்பட்டன.

*1946* ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் உத்தரட்டாதி நட்சத்திரத்-தில் இரண்டு கரங்களுடன் நிற்கும் கண்ணகை அம்பாளின் செம்பு விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டது. நந்தி பலிபீடம் கொடித்தம்பம் முதலியன அமைக்கப்பட்டன. 1955இல் வயிரவர் கோயில் புனரமைக்கப்பட்டு, அங்கு வயிரவர் சூலம் பிரதிட்டை செய்யப்பட்டது.

1958 ஆவணி உத்தரட்டாதியில் சிவகாமியம்மன் விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டது. 1968ல் இப்போதிருக்கும் மணிக்கோபுரத்தில், மணியேற்றப்பட்டது. ஆலயமதில் கட்டப்பட்டது.

பாலஸ்தாபனம் செய்யப்பட்ட பரிவாரத் தெய்வங்களான விநாயகரும் வேற்பெருமானும் வெண்ணிற வயிரக் கற்களாற் புதிதாகக் கட்டப்பட்ட ஆலயங்களில் 1974இல் பிரதிட்டை செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து புதிய களஞ்சிய அறை, மடைப்பள்ளி, பணிமனை, வாகனசாலை முதலியன கட்டப்பட்டதோடு பல திருத்த வேலைகளுஞ் செய்யப்பட்டன.

ஆரம்பத்தில் ஆலயத்துக்குத் தூபி அமைக்கப்பட்டிருக்கவில்லை. கருவறையின் மேற்பகுதியில் தகரத்தினாற் செய்யப்பட்ட குடிலொன்று வைக்கப்பட்டிருந்தது. இதற்குரிய காரணம் என்னவென்றறிய முயற்சித்தேன். அதற்குரிய விடையை, ரௌத்தரி வருடப் பங்குனி மாதச் (14.3.1981 - 13.4.1981) சோதிட மலரிற் காணமுடிந்தது.

மூலஸ்தானத்திற்குத் தூபி இல்லையெனவும் அது குடில் போன்ற அமைப்பில் தகரத்தால் வேயப்பட்டிருந்த தெனவும் சோதிடமலர் கூறுகிறது. மேலும், மூலஸ்தானத்துக்கு ஏன் தூபி அமைக்கவில்லை என்று கேட்டதற்கு, சில காலத்துக்குமுன் ஸ்துாபி அமைக்க விரும்பினார்களென்றும், அம்பிகை கனவிற் றோன்றிக் கணவனை இழந்த கைம்பெண்ணாகிய தனக்கு மாளிகை அவசியமில்லை ஒரு குடிலே போதுமெனச் சொன்னதாகவும் அதனால், தூபி அமைக்குந் திட்டம் கைவிடப்பட்டதாகவும் சோதிடமலரிற் கூறப்பட்டிருக்கிறது.

சோதிடமலர் தருஞ் செய்தி என்னவாயிருந்தாலும், 1989.06.04 இல் கண்ணகை அம்மையும் பரிவாரத் தெய்வங்களும் பாலஸ்தாபனம் செய்யப்பட்ட பின், 1991.07.04 இல் கருவறையின் மேல் தாபிக்கப்பட்ட தூபிக்கு குடமுழுக்குச் செய்யப்பட்டது.

1998.12.24 இல் இருந்து 1999.01.02 வரை நடைபெற வேண்டிய மகோற்சவம், சித்திரத் தேர் வேலை நிறைவு பெறாமையால் நடைபெறவில்லை. அதற்குப் பதிலாக 1999.03.22 -1999.03.31 வரையுள்ள காலப்பகுதியில் மகோற்சவம் நடைபெற்றது. ஆனாலும் 1999.03.26 இல் தேர் மண்டப வேலையும் தேர் வேலையும் நிறைவு பெறாத நிலையில் சித்திரத் தேர் வெள்ளோட்டம் நிகழ்ந்தது.



மீண்டும் வழமைபோல் அவ்வாண்டிலேயே திருவெம்பாவைக் காலத்தில் மகோற்சவம் நடைபெறத் தொடங்கியது. ஆரம்பத்தில் கட்டுத் தேரிலேறி வந்த அம்மை இப்போது சித்திரத் தேரிலேறி வந்து அடியார்களுக்கு அருள்புரிகின்றாள்.

பன்றித் தலைச்சித் தாயே.... ஆடாயூஞ்சல் என்று பாடி அம்மையை ஊஞ்சல் ஆட்டிய காலங் கழிந்தது. இப்பொழுது அம்மை.." பன்றித்தலைச்சி வாழும் இராஜரா ஜேஸ்வரியே யாடீரூஞ்சல் " எனப்பாடி ஆட்ட, ஊஞ்சலாடி வருகிறாள். இன்னும் இவ்வாலயத்தில் இதுபோன்ற எத்தனை மாற்றங்கள் நிகழுமோ? நிகழ்வனவெல்லாம நன்றாக அமைவதாக. இவ்வாலயம் அந்தமில் இன்பத்து வீடருளும் அருட்சத்தியின் ஆலயமாகப் யொலிவதாக என எல்லாம் வல்ல இறைவியை இறைஞ்சுவோம்.

இவ்வாலயத்தில் கண்ணகி வழிபாட்டுக் கோலங்கள் இன்னும் எவ்வளவு காலம் நிலைத்திருக்கும்? இவ் வினாவுக்கு விடை கூறுவது இலகுவான காரியமல்ல அதற்குக் காலந்தான் விடைகூறவேண்டும்.

## ஆசிரியர் எழுதிய நூல்கள்

- சந்திரமௌலீசர் ஆலய வரலாறு
- ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய வரலாறு
- கந்தபுராணச் சிந்தனைகள்
- மகா சிவராத்திரி
- மூவர் தமிழ்
- சூரசங்காரம்
- திருமுறை போற்றுந் தெய்வம்
- திருமந்திரத்தில் வாழ்வியல்
- சிவப்பிரகாசம் - உரை
  (இது 2001 ஆவணியிலிருந்து தொடர்ச்சியாக 26 மாதம் சைவநீதியில் வெளிவந்தது.)
- சிவஞானபோதச் சிற்றுரை
  (எளியநடையில் எழுதப்பட்டது)